# மனம்போல வாழ்வு

வ. உ. சிதம்பரம் பிள்ளை.

இரண்டாம் பதிப்பு.

சென்னை: இந்தியா ப்ரின்டிங் வொர்க்ஸ்.

1916.

*Copy Right.*

# பொருட் குறிப்பு


| பொருள். | பக்கம். |
|---|---|
| சமர்ப்பணம் .... .... .... | 5 |
| முதனூற் பா .... .... .... | 6 |
| முதனூலின் பாயிரம் .... .... | 7 |
| முதனூலைப்பற்றிய சில மதிப்புரைகள் .... | 8 |
| சிறப்புப்பாயிரம் .... .... .... | 10 |
| பாயிரம் .... .... .... | 11 |
| முதல் பதிப்பின் முகவுரை .... .... | 13 |
| காப்பு முதலியன .... .... .... | 16 |
| நினைப்பும் ஒழுக்கமும் .... .... | 17 |
| நினைப்பும் நிலைமையும் .... .... | 22 |
| நினைப்பும் சரீரமும் ஆரோக்கியமும் .... | 41 |
| நினைப்பும் காரியமும் .... .... | 46 |
| நினைப்பும் காரியசித்தியும் .... .... | 51 |
| மனக்காட்சிகளும் இலக்ஷியங்களும் .... | 57 |
| சாந்தி .... .... .... | 65 |
| ஜேம்ஸ் ஆலன் சரித்திரச் சுருக்கம் .... | 69 |
| மனம் போல வாழ்வு முதலிய நூல்களைப் பற்றிய மதிப்புரைகளிற் சில .... | 75 |

## முயற்சியின் வலிமை

“ உலையா[1] முயற்சி களைகணா[2] ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே-உலகறியப்
பால்முளை[3] தின்று மறலி[4] யுயிர்குடித்த
கால்முளை[5]யே போலும் கரி[6].”

1 உலையா=கெடாத. 2 களைகணா=ஆதரவாக.
3 பால் முளை=ஊழின் அங்குரம். 4 மறலி=எமன்.
5 கால் முளை=பிள்ளை (மார்க்கண்டன்). 6 கரி=சான்று.

# சமர்ப்பணம்

தமிழகத்து மக்களாகிய எனது சகோதரர் சகோதரிகள், அறிவு, ஒழுக்கம், செல்வம, ஐக்கியம், இவற்றில் மேம்பாடு அடைதற்குத் தம்மால் இயன்றவரை உழைத்தவர், உழைக்கின்றவர், உழைப்பவர் ஆகிய சுதேச பரதேச சகோதரர் சகோதரிகளின் திவ்விய பாதாரவிந்தங்களில் இந்நூலைச் சமர்ப்பிக்கின்றேன்.

வ. உ. சி.

## முயற்சியின் வலிமை

"உலையா[1] முயற்சி களைகணா[2] ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே-உலகறியப்
பால்முளை[3] தின்று மறலி[4] யுயிர்குடித்த
கால்முளை[5]யே போலும் கரி[6]."

1 உலையா=கெடாத. 2 களைகணா=ஆதரவாக.
3 பால் முளை=ஊழின் அங்குரம். 4 மறலி=எமன்.
5 கால் முளை=பிள்ளை (மார்க்கண்டன்). 6 கரி=சான்று.

## முதனூற் பா

ஆக்கல் திருத்தல் அமைப்பவன் மனனே ;
மனிதன் மனனே ; மற்றவன் நினைப்பாம்
கருவியை யெடுத்துக் கருதிய திருத்தி
ஆயிரம் இன்புதுன் பாக்கிக் கொள்ளுவன் ;
தனித்து நினைப்பான், சாரும்அஃ தாங்கே ;
நிலைமைகள் அவன்மன நிலைமைகாட் டாடியே.

காட்டு ஆடி=காட்டும் கண்ணாடி.

# முதனூலின் பாயிரம்

தியானமும் அநுபவமுமாகிய இரண்டின் பலனாக வெளிவந்த இப்புஸ்தகம் நினைப்பின் வலிமையைப் பற்றி விரிவாகக் கூறுகின்ற ஒரு பெரிய நூல் அன்று : " தம்மை ஆக்குபவர் தாமே " என்னும் உண்மையைப் புருஷர்களும் ஸ்திரீகளும் கண்டு உணருமாறு செய்யக் கருதிய சிறு நூலே. மனிதர் தாம் உட்கொள்ளும் நினைப்புக்களைப் போலவே ஆகின்றனர் ; ஒழுக்க மாகிய அகஉடையையும் நிலைமையாகிய புறஉடையை யும் செய்கின்ற கர்த்தா மனமே. அஃது அவ்வுடையை இதுவரையில் மடமையோடும் துன்பத்தோடும் நெய்து வந்தது ; இனி அறிவோடும் இன்பத்தோடும் நெய்யும்.

ஜேம்ஸ் ஆலன்.

## முதனூலைப் பற்றிய சில மதிப்புரைகள்

"இந்நூல் சுயஞானம் சுரக்கும் ஓர் ஊற்று."—லீஸெஸ்டர் பயோனியர்.

"இது நீங்கள் எல்லாரும் படிக்கவேண்டிய ஒரு புஸ்தகம்."—நார்தேர்ன் வீக்லி.

"இச்சிறு புஸ்தகம் உண்மையில் ஜீவதத்துவ சாஸ்திரங்களின் ஆபரணங்களுள் ஒன்றாக இருக்கின்றது. நீங்கள் உதவிபுரிய விரும்பும் உங்கள் சிநேகிதர்களுக்கு அளிப்பதற்கு இதனினும் நல்ல புஸ்தகம் ஒன்றைக் காட்டுவது நம்மால் இயலாது."—ஸையேன்ஸ் அவ் லைவ்.

"இந்நூலும், ஸ்ரீ. ஆலன் இயற்றியுள்ள மற்ற நூல்களைப்போன்று, மிகநன்றாகக் கூறப்பட்டுள்ள ஞானத்தை மிகுதியாகக் கொண்டுள்ளது. இதன் ஒவ்வொரு பக்கமும் சாந்தம், சிந்தனை, சமயம்-இவை பொருந்திய மனத்தை வெளிப்படுத்துகின்றது. இதன் நடை, விரைவில் சுயஞானம் சுரக்கச் செய்யத்தக்கதாகவும், ஆறுதல் செய்யத்தக்கதாகவுமுள்ள ஒரு நல்ல கீதத்திற்குச் சமமாயிருக்கிறது. 'இப்புஸ்தகத்தை வாங்கிப் படியுங்கள்' என்று கூற நாம் ஆசைப்படுகிறோம். இந்நூல் மனிதனது புறத்திலும் அகத்திலுமுள்ள ஓர் இரத்தினம்.—பெய்ஸ்லே டேய்லி எக்ப்ரேஸ்.

# மனம் போல வாழ்வு

## சிறப்புப் பாயிரம்

ஜேம்ஸ் ஆலன் அவர்களது அருமையான நூல்களில் ஒன்றன் மொழிபெயர்ப்பாகிய இம் "மனம் போல வாழ்"வை நம் தமிழுலகத்திற்கு அளித்தவர்கள், ஒழுக்கமும் புலமையும் ஒருங்கமையப் பெற்றவரும், மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவரும், நம் தேசாபிமானியுமாகிய ஸ்ரீமாந். வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள். இவ்விரண்டாம் பதிப்புப் பெரும்பான்மை திருத்தப்பட்டுச் சொன்னயம் பொருணயம் பொலிய மிகஅழகாக அமைந்துள்ளது. இஃது, ஒவ்வொருவர் வாழ்வும் தாழ்வும் அவரவர் மனநிலைமைகளை யொத்தே அமைகின்றன என்னும் அரிய உண்மையை ஐயமற விளக்கி, மனிதரை நல்வழிப்படுத்தி நல்வாழ்விற் சேர்க்கும் நல்லாசிரியரைப் போன்று விளங்குகின்றது. இதன் முதற்பதிப்புப் பிரதிகள் இரண்டாயிரமும் செலவாகி இதனை இரண்டாம் முறை பதிப்பிக்குமாறு பலர் விரும்பிக் கோரிநின்ற தொன்றே இதன் அருமையையும் பெருமையையும் நன்கு விளக்கும். நமது நாட்டுப் பல மொழிகளிலும் பலமுறை பதிப்பிக்கத்தக்க சிறப்புவாய்ந்த இந்நூலை நம் தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் வாங்கிப் படித்துத் தமது உள்ளத்தைப் பண்படுத்தி இம்மையிலும் மறுமையிலும் நல்வாழ்வை அடையும்படிக்கும், இந்நூல் இவ்வுலகின்கண் என்றும் நின்று நிலவும்படிக்கும், எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக.

தில்லையாடி, தஞ்சை, இராக்ஷஸஹு தைமீ 5வ. } த. வேதியப்பிள்ளை.

# பாயிரம்

இம் " மனம் போல வாழ்வு" ஸ்ரீ. ஜேம்ஸ் ஆலன் அவர்களது அரிய நூல்களில் ஒன்றன் மொழிபெயர்ப்பு. இம்மையிலும் மறுமையிலும் மேலான பதவிகளை நாம் அடைவதற் குரிய வழிகள் இந்நூலில் மிக நன்றாக வரையப்பட்டுள்ளன. இந்நூலின் அருமை இதனை ஒரு முறை படித்துப் பார்த்தஅளவிலே நன்கு விளங்கும். இவ்விரண்டாம் பதிப்பின் தமிழ் நடை முதலியன முதற்பதிப்பின் தமிழ் நடை முதலியவற்றினும் மிக இனிமையாகவும் அழகாகவும் அமைந்துள்ளன. இதன் முடிவில் ஸ்ரீ. ஜேம்ஸ் ஆலன் அவர்களது சரித்திரச் சுருக்கம் சேர்க்கப்பட்டுள்ளது.

இப்பதிப்பின் கையெழுத்துப்பிரதியைச் சென்னை பச்சையப்பன் கல்லூரி சுதேசபாஷா அத்தியக்ஷகர் ஸ்ரீமாந். தி. செல்வக்கேசவராய முதலியாரவர்கள், யம். ஏ., முதனூலோடு ஒத்துப் பார்த்துச் சீர்திருத்தி அழகுபடுத்தித் தந்தார்கள். ஸ்ரீமாந். முதலியாரவர்கள் எனது நூல்கள் சம்பந்தமாக எனக்குச் செய்து வரும் நிகரற்ற பல உதவிகளுக்காக யான் அவர்களுக்கு எனது மனம் வாக்குக் காயங்களால் எஞ்ஞான்றும் வந்தனை வழிபாடுகள் செய்யக் கடமைப்பட்டுள்ளேன்

தமிழறிஞர் பலரும் இந்நூலைக் கற்பிப்பதற்கு உரியர். இதில் கூறப்பட்டுள்ள பொருள்களுக்குப் பொருத்தமான மேற்கோள்களை நமது தமிழ் நூல்

களிலிருந்து எடுத்துக் காட்டி இதன் பொருள் கற்போரது உள்ளத்துட் பதியுமாறு செய்தலே இதனைக் கற்பிக்கும் முறை. அறத்தையோ பொருளையோ இன்பத்தையோ வீட்டையோ அடைய விரும்பும் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இதனைக் கற்றற்கு உரியர். இதில் கூறப்பட்டுள்ள பொருள்களைக் கசடறக் கற்று உள்ளத்துட் கொண்டு கடைப்பிடித்து ஒழுகுதலே இதனைக் கற்கும் முறை.

போர்ச்சுகீஸ் கீழ் ஆபிரிக்கா, பெயிரா நகரில் தற்காலம் வசித்துவராநின்ற எனது மெய்ச் சகோதரர் ஸ்ரீமாந். வீ. சா. நடராஜபிள்ளை யவர்கள் எனக்கு அளித்த பொருளுதவியைக்கொண்டு இஃது அச்சிடப் பெற்றது. அவ்வுதவியைச் செய்ததற்காக அவர்களுக்கும், அவ்வுதவியைச் செய்யுமாறு அவர்களைத் தூண்டியருளிய எனது மெய்ச் சகோதரர் தில்லையாடி ஸ்ரீமாந். த. வேதியப்பிள்ளை யவர்களுக்கும், யான் என்ஞான்றும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

பிரம்பை, சென்னை,<br>இராக்ஷஸ௵ தைமீ ௨௨ } வ. உ. சிதம்பரம் பிள்ளை.

## முதல் பதிப்பின் முகவுரை

"எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்னும் திருவள்ளுவரது திருக்குறளின் பொருளையே விரித்துரைத்தனரோ என்று ஐயுறுமாறு இந்நூலின் முதனூலை ஆங்கிலபாஷையில் ஆக்கியருளிய ஸ்ரீ. ஜேம்ஸ் ஆலன் என்னும் ஆங்கில பண்டிதர்—அறிவின் பண்டிதர் எனினும் அமையும்—தம் நூற்கு "மனிதன் நினைப்பதுபோல வாழ்வு" என்று பொருள்படும் பெயரினை இட்டனர். அதன் மொழிபெயர்ப்பாகிய இந் நூற்கு "மனம்போல வாழ்வு" என்ற பெயரினை இட்டதன் காரணம்,—நினைப்பு குணமாகவும் மனம் குணியாகவும் இருத்தலின் ஒற்றுமைபற்றி நினைப்பெனினும் மனமெனினும ஒக்கும் என்று கொண்ட நமது முன்னோர்கள் குணியைச் சிறப்பித்து "மனம் போல வாழ்வு" என்று வழங்கலான முதுமொழியே.

இதன் முதனூலாசிரியர் இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றின் பயன்களையும் அடைதற்குரிய மார்க்கங்களைக் கூறியுள்ள பெருமையை இந்நூலைப் படிப்போர் தாமே பிரத்தியக்ஷத்தில் காண்பராதலின், யான் அதனை எடுத்துக்காட்டுவது மிகையேயாகும். இந்நாள் வரையில் யான் வாசித்துள்ள எந்நூலும் இந்நூல் போல அரிய பொருள்களை எளிதில் உணர்ந்து கடைப் பிடித்து ஒழுகத்தக்க விதத்திற் கூறியிருக்க நான் கண்டிலேன். இந்நூலை யான் மொழிபெயர்த்ததற்குக் காரணம் இதுவே.

# முதல் பதிப்பின் முகவுரை

இதனை முதனூலுக்குச் சற்றேறக்குறையச் சரியான மொழிபெயர்ப்பென்றே சொல்லலாம்; முதனூலில் மேற்கோளாகக் காட்டியுள்ள செய்யுள்கள் எத்தனை அடிகளைக் கொண்டுள்ளனவோ அத்தனை அடிகளில் தமிழ்ச் செய்யுள்களை அமைத்துள்ளேன். மற்றைய வசன மேற்கோள்களுக்கு அவற்றிற்குரிய அடையாளங்கள் இட்டுள்ளேன். ஆயினும், சில இடங்களில் முதனூலாசிரியரது கருத்துக்களை நன்கு விளக்குதற் பொருட்டுச் சிற்சில சொற்களைக் கூட்டியும் குறைத்தும் மொழிபெயர்த்திருக்கிறேன். அன்றியும்,

"கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்றபடி, இந்நூலின் அரிய பொருள்களைத் தமிழுலகம் நன்குணர்ந்து கைக்கொண்டொழுகல்வேண்டும் என்ற எண்ணமே என் மனத்தின்கண் முற்பட்டு நின்றமையின், பயில வழங்கும் வடமொழிகளை இதில் மிகுதியாகத் தொடுத்திருக்கிறேன். இவ்விரண்டின் பொருட்டும் அறிவுடையார் என்னை மன்னிப்பாராக.

இந்நூலை மொழிபெயர்க்கவேண்டும் என்ற விருப்பம் என் மனத்தில் நெடுநாளாக இருந்ததேனும், அது நிறைவேற வாய்த்த சமயத்தை நோக்குங்கால், எல்லாம் வல்ல இறைவன் அருளை நினைந்து உருகும்படியிருக்கின்றது. இராஜநிந்தனைக் குற்றம் செய்ததாக

# முதல் பதிப்பின் முகவுரை

எனது ஆயுள்வரையில் நாடு கடத்தப்படவேண்டு மென்று தீர்ப்பு விதிக்கப்பெற்று, நான் இவ்விடம் ஸென்ட்ரல் ஜெயிலில் இருக்கிறதும் தற்பொழுது ஹை கோர்ட் உத்தரவுப்படி எனது அப்பீல் முடிவுவரை நான் வேலையினின்றும் நீக்கப்பட்டு வெறுங் காவலில் வைக்கப்பட்டிருக்கிறதும், அநேகருக்குத் தெரிந்திருக் கும். உயிர்களுக்கு உதவுதலே கடவுளை ஆராதித்தல் என்னும் கொள்கையை யுடைய எனக்கு இங்ஙனம் கிடைத்த அவகாசம், எனது விருப்பத்தை நிறைவேற் றிக்கொள்ள அவன் அருளால் உண்டான நல்ல தருண மாகத் தோன்றியது. ஆதலின், இச்சமயத்தை இந் நூலை மொழிபெயர்ப்பதிலும் திருக்குறளின் முதற்பாக மாகிய அறத்துப்பாலை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப் பதிலும் உபயோகப்படுத்தித் திருப்தியடைந்தேன்.

இவ்விடம் சென்ட்ரல் ஜெயில் சூபெரின்டென் டென்ட் மிஸ்டர். இ. எச். காட்ஸ்டென் (E. H. Gadsden) துரையவர்கள் நான் இந்நூலை மொழி பெயர்ப்பதற்குத் தம்மால் இயன்ற எல்லா சௌகரி யங்களையும் செய்து தந்தமையின், நான் அன்னார்க்கு மிகவும் நன்றியறிதல் உள்ளவனாயிருக்கிறேன்.

> "காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
> ஞாலத்தின் மாணப் பெரிது."

கோயமுத்தூர்,
1-10-1908.

வ. உ. சிதம்பரம்பிள்ளை.

## காப்பு.

மனம்போலவாழ் வென்று மாநிலத்திற் பல்லோர்
தினந்தோறும் சொல்மொழியைச் சிந்தித்—தினங்கூட்டி
ஆங்கிலத்தில் ஜேம்ஸ்ஆலன் ஆக்கிய நூலைத்தமிழில்
ஈங்குரைக்கச் செய்வான் இறை.

## அடக்கம்.

அறிவுமிகும் ஆன்றோர் அவையடக்கம் என்றும்
அறிவுதரும் மாண்பால் அறைவர்.—அறிவில்
சிறியேனும் அஃதுரைத்தல் சீரியனுக் காட்டும்
குறியாகும் என்றயிர்த்தேன் கொண்டு.

## பயன்.

இந்நூற் பொருளை இனிதுணர்ந்து கைப்பற்றி
இந்நூற் படிபொழுகின், இப்பிறப்பில்—நந்நூலின்
இம்மை மறுமைகளை எய்திப்பின் வீடடையும்
செம்மைநெறி காண்போம் சிறந்து.

## பிரார்த்தனை

தெய்வப் புலமைத் திருவள்ளுவர் வாழ்ந்த
தெய்வப் பொருளே சிறந்தொளிரும்—தெய்வத்
அமிழ்துன்று நாட்டுறையும் தக்கோர்காள்! இஃதன்
அமிழ்துண்டு செய்க அறம்.

# மனம்போல வாழ்வு.

## நினைப்பும் ஒழுக்கமும்.

'மனம்' என்பதும் 'நினைப்பு' என்பதும் ஒரே அர்த்தத்தைக் கொடுக்கும் சொற்கள். "மனம்போல வாழ்வு" என்பது 'மனிதனது நினைப்புக்குத் தக்கவாறு அவனுடைய வாழ்வு அமைகின்றது' என்பதாம். மனிதன் எவ்வாறு நினைக்கின்றானோ, அவ்வாறே அவனது ஆன்மா ஆகின்றது; மனிதன் எவ்வாறு நினைக்கின்றானோ அவ்வாறே அவனது வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையும் நிலைமையும் அமைகின்றன. மனிதன் எதனை நினைக்கின்றானோ அதன் வடிவை அடைகின்றான்; அவனது நினைப்புக்களின் தொகுதியே அவனுடைய ஒழுக்கம்.

பூமியில் மண்ணுள் மறைந்துகிடக்கும் வித்தினின்றே மரம் உண்டாகின்றது. அதுபோல, மனிதனுடைய அகத்துள் மறைந்துகிடக்கும் நினைப்பினின்றே அவனது ஒவ்வொரு செயலும் உண்டாகின்றது. வித்தில்லாமல் மரம் உண்டாதல் இல்லை. அதுபோல, நினைப்பில்லாமல் செயல் உண்டாதல் இல்லை. மனதாரச் செய்கின்ற செயல்களைப் போலவே, தாமேயாகவும் சுபாவமாகவும் நிகழ்கின்ற செயல்களும் நினைப்பினின்றே உண்டாகின்றன.

# மனம் போல வாழ்வு.

செயல்கள் நினைப்பின் மலர்கள்; இன்பமும் துன்பமும் அதன் கனிகள். இவ்வாறாக, மனிதன் இவைகளை விளைவித்துக்கொள்கிறான்.

மனமெனும் நினைப்பே நமையாக் கியது;
நினைப்பால் நாம்நம் நிலைமையை உற்றனம்.
ஒருவன் நினைப்புக் கருமறம் பற்றிடின்,
எருதுபின் உருளைபோல் வரும்நனி துன்பமே;
ஒருவன் நினைப்புத் திருஅறம் பற்றிடின்,
தன்னிழல் போல மன்னும் இன்பமே.

மனிதன் நியதிக் கிரமத்தில் உண்டானவனேயன்றித் தந்திரத்தால் அல்லது மந்திரத்தால் ஆக்கப்பட்டவன் அல்லன். பிரத்தியக்ஷமான ஸ்தூலப்பொருள்கள் அடங்கிய இவ்வுலகத்தின்கண் காரணகாரியங்கள் கிரமமாகவும் நிச்சயமாகவும் நிகழ்தல்போல, பிரத்தியக்ஷமல்லாத நினைப்புலகத்தின்கண்ணும் காரணகாரியங்கள் கிரமமாகவும் நிச்சயமாகவும் நிகழ்கின்றன. மேம்பாடும் தெய்வத்தன்மையும் வாய்ந்த ஒழுக்கம், கடவுளின் கிருபையாலாவது தற்செயலாயாவது உண்டானதன்று; அது நேர்மையான நினைப்புக்களை இடைவிடாது நினைத்துவந்ததன் நேரான பயனாகவும், தெய்வத்தன்மை வாய்ந்த நினைப்புக்களோடு நீடித்த காலம் விருப்பத்தோடு பழகிவந்த பழக்கத்தின் நேரான காரியமாகவும் உண்டானதே. அங்ஙனமே, இழிவும் மிருகத்தன்மையும் பொருந்திய ஒழுக்கமும், இழிவான நினைப்புக்

# நினைப்பும் ஒழுக்கமும்.

*நினை மனத்தில் இடைவிடாது வைத்துக்கொண்டிருந்த செயலின் நேரான பயனாக உண்டானதே.*

• மனிதன் ஆவதும் அழிவதும் தன்னாலே. நினைப்பாகிய உலைக்களத்தில் சில படைக்கலங்களைச் செய்து, அவற்றால் தன்னை அழித்துக்கொள்கிறான்; அவ்வுலைக்களத்திற்றானே சில கருவிகளைச் செய்து, அவற்றால் வலிமை, சந்தோஷம், அமைதி என்னும் திவ்வியமான அரண்களைத் தனக்குக் கட்டிக்கொள்கிறான். மனிதன் நல்ல நினைப்புக்களைக் கைக்கொண்டு நல்லவழிகளில் செலுத்துவதனால் தெய்வத்தன்மையை அடைகின்றான்; கெட்ட நினைப்புக்களைக் கைக்கொண்டு கெட்ட வழிகளில் செலுத்துவதனால் மிருகத்தன்மையை அடைகின்றான். அதிஉயர்வும் அதிதாழ்வுமான இந்த இரண்டுக்கும் இடையிலேயுள்ள மற்றைய ஒழுக்க வேறுபாடுகளெல்லாம். அவைகளை இயற்றுங் கருத்தாவும் மனிதனே; ஏவுங்கருத்தாவும் மனிதனே.

இக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஆன்ம சம்பந்தமான அழகிய உண்மைகளுள் **மனிதன் நினைப்பின் கருத்தா; ஒழுக்கத்தை கருக்கட்டுகின்றவன்; நிலையையும் சுற்றுச்சார்பையும் விதியையும் உண்டாக்கி உருப்படுத்துகின்றவன்**—என்ற உண்மையைப்போல் சந்தோஷத்தை அளிக்கத்தக்கதும், தெய்வத்தன்மையையும் உறுதியையும் விளைக்கத்தக்கதும் வேறொன்றில்லை.

# மனம் போல வாழ்வு

ஆற்றலும் அறிவும் அன்புமுள்ள ஜீவனாகவும், தனது நினைப்புக்களுக்குத் தான் கர்த்தனாகவும் இருத்தலால், மனிதன் ஒவ்வொரு ஸ்தானத்திற்கும் உரிய திறவுகோலை உடையவனாகவும், தன்னை விரும்பின படியே செய்துகொள்ளத் தக்க கர்த்திருத்துவத்தை உடையவனாகவும் இருக்கிறான்.

மனிதன் எப்பொழுதும் தலைவனே; பாராட்டுவாரின்றி மிக மெலிந்திருக்கும் நிலைமையிலும் அவன் தலைவனே; ஆனால், இந்நிலைமையில் அவன் தனது காரியங்களை ஒழுங்காக நிர்வகிக்காத ஒரு மூடத்தலைவனாகிறான். அவன் எப்பொழுது தன் நிலைமையைப் பற்றிச் சிந்திக்கவும் தன் ஜீவனுக்கு ஆதாரமான நியதியைப்பற்றி ஆவலுடன் விசாரிக்கவும் தொடங்குகிறானோ, அப்பொழுதே அவன் தனது முயற்சிகளை விவேகத்துடன் செலுத்தி நற்பயன் அடையும் விதத்தில் தனது நினைப்புக்களைத் திருத்தும் அறிவுடைய தலைவன் ஆகிறான். தன் தலைமையை அறிந்த தலைவன் அவனே; அங்ஙனம் ஆதற்கு அவன் தன்னுள் நினைப்பின் நியதிகளைக் கண்டுபிடித்தல் வேண்டும். அவற்றைக் கண்டுபிடித்தற்குரிய சாதனங்களாவன முயற்சியும் தன்னையறிதலும் அநுபவமும் என்பனவே.

அதிக ஆழமாகச் சுரங்கம் அறுத்தலாலும், அதிக கவனத்தோடு தேடுதலாலும், தங்கமும் வைரமும் கிடைக்கின்றன; மனிதன் தனது ஆன்மாவாகிய சுரங்கத்தின்கண் ஆழ்ந்துசென்று தேடுவானாயின், தனது

# நினைப்பும் ஒழுக்கமும்.

ஆன்மசம்பந்தமான ஒவ்வோர் உண்மையினையுங் காணல்கூடும். மனிதன் தனது நினைப்புக்கள் தன்னிடத்தும், மற்றவரிடத்தும், தனது வாழ்க்கையிடத்தும், நிலைமைகளிடத்தும் உண்டுபண்ணும் காரியங்களைக் கண்டும், பொறுமையான அப்பியாசத்தாலும் விசாரணையாலும் காரணகாரியங்களைப் பொருத்திப்பார்த்தும், விவேகமும் ஞானமும் சக்தியுமாகிய தன்னைப் பற்றிய அறிவை அடைதற்கு மார்க்கமாகப் பிரதிதினமும் நிகழும் ஒவ்வொரு சிறிய சம்பவத்தும் தான் கொள்ளும் அநுபவம் முழுவதையும் உபயோகித்தும், தனது நினைப்புக்களை எச்சரிக்கையாகக் காத்துத் தன் வசப்படுத்தித் தக்க வழியில் திருப்புவானாயின், தானே தனது ஒழுக்கத்தை ஆக்குபவன், தானே தனது வாழ்க்கையைத் திருத்துபவன், தானே தனது விதியை ஏற்படுத்துபவன் என்னும் உண்மைகளை நன்றாக அறிவான். "தேடுகிறவன் காண்பான்." "தட்டுகிறவனுக்குக் கதவு திறக்கப்படும்." என்னும் உண்மைகள் மற்ற எவ்விஷயத்தைப் பார்க்கினும் இவ் விஷயத்திற்கு முழுப் பொருத்தமுடையவை. ஏனெனில், பொறுமை, அப்பியாசம், விடாமுயற்சி இவற்றால் மாத்திரம் மனிதன் ஞானாலயத்தின் வாயிலுக்குள் பிரவேசித்தல் கூடும்.

"நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்-நிலையினும்
மேன்மேல் உயர்த்தி நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்."

## நினைப்பும் நிலைமையும்.

ஒரு மனிதனது மனம், விவேகத்துடன் பயிர் செய்யத்தக்க, அல்லது காடாகும்படி விட்டுவிடத்தக்க, ஒரு தோட்டத்திற்குச் சமானமாகும். பயிர் செய்தாலும் செய்யாவிட்டாலும் தோட்டம் ஏதேனும் ஒரு விளைவைக் கொடுக்காமற் போகாது. அதில் பிரயோஜனமுள்ள வித்துக்களை விதைக்காத பக்ஷத்தில், பிரயோஜனமில்லாத பூடுகளின் வித்துக்கள் ஏராளமாக விழுந்து பல பூடுகள் விளையும்.

ஒரு தோட்டக்காரன் தனது நிலத்திலுள்ள புல் பூடுகளை நீக்கித் தனக்கு வேண்டும் கனிகளையும் காய்கறிகளையும் கொடுக்கத் தக்க மரங்களையும் செடிகளையும் அதில் வைத்து வளர்த்தல்போல, மனிதன் தனது மனத்திலுள்ள குற்ற நினைப்புக்களும் பயனற்ற நினைப்புக்களும் அசுத்த நினைப்புக்களுமாகிய புல்பூடுகளை நீக்கி, ஆரோக்கியமும் செல்வமும் வலிமையுமாகிய காய்கறிகளையும் இன்பமும் புகழும் முத்தியுமாகிய கனிகளையும் கொடுக்கத் தக்க குற்றமற்ற நினைப்புக்களும் பயனுள்ள நினைப்புக்களும் சுத்தமான நினைப்புக்களுமாகிய செடிகளையும் மரங்களையும் வைத்து வளர்த்துக்கொள்ளலாம். இங்ஙனம் செய்துவருதலால் மனிதன் தனது ஆன்மாவாகிய தோட்டத்தின் தலைவன் என்றும், தனது வாழ்க்கையின் கர்த்தன் என்றும், விரைவிலோ தாழ்ப்பிலோ, தெரிந்துகொள்வான். அன்றியும், அவன் நினைப்பின் நியதிகளைத் தன்னுள் காண்கின்றான்; நினைப்பின் சக்தி

களும் மனோதத்துவங்களும், தனது ஒழுக்கத்தையும் நிலைமையையும் விதியையும் எங்ஙனம் உருப்படுத்துகின்றன என்பதை நாளுக்குநாள் நன்றாகச் சூட்சுமித்தறிகிறான்.

நினைப்பும் ஒழுக்கமும் ஒன்றே; ஒழுக்கம் நிலைமையின் மூலமாகவும் சந்தர்ப்பத்தின் மூலமாகவுமே வெளிப்படக்கூடுமாதலால், ஒரு மனிதனது புறநிலைமைகள் அவனுடைய அகநிலைமைகட்கு எப்பொழுதும் ஒத்தே யிருக்கும். இதனால் ஒரு மனிதனுடைய ஒரு கால நிலைமைகள் அவனுடைய எல்லா ஒழுக்கங்களையும் காட்டுமென்று கொள்ளலாகாது; அந்நிலைமைகள் அவனுடைய அபிவிர்த்திக்கு அக்காலத்தில் இன்றியமையாதனவாக அவனுடைய சில முக்கிய நினைப்புக்களோடு நெருங்கிய சம்பந்தம் உடையனவா யிருக்கும்.

ஒவ்வொரு மனிதனும் தனது ஜீவநியதிப்படி தான் இருக்கவேண்டிய இடத்தில் இருக்கிறான். எந்த நினைப்புக்களால் அவனுடைய ஒழுக்கத்தை உண்டாக்கிக் கொண்டானோ, அந்த நினைப்புக்களே அவனை அந்த இடத்திற்குக் கொண்டுவந்திருக்கின்றன. அவன் வாழ்க்கையில் எதுவும் தானே உண்டான செயல் என்பது கிடையாது; எல்லாம் ஒருபொழுதும் பிசகாத ஒரு நியதியின் காரியமாகவே நடக்கின்றன. இவ்வுண்மை தங்கள் நிலைமைகளில் மனத்திருப்தி உடையார்க்கும் இல்லார்க்கும் ஒரே விதமாகப் பொருந்தும். மனி

தன் நாளுக்குநாள் பரிணமித்து விர்த்தியாகின்ற பிராணியானதால், மனிதன் கற்றற்கும் விர்த்தியாதற்கும் உரிய நிலைமையில் இருக்கிறான். ஒரு சந்தர்ப்பத்தால் அவன் பெறலான ஆன்ம போதத்தை அவன் கற்றதும், அது நீங்கி வேறு சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன.

தான் புறநிலைமைகளுக்கு உட்பட்டவனென்று எவ்வளவு காலம் நம்பிக்கொண்டிருக்கிறானோ, அவ்வளவு காலமும் மனிதன் புறநிலைமைகளால் மொத்துண்டு திரிகிறான்; ஆனால், தான் சிருஷ்டிசெய்யும் ஓர் சக்தியென்றும், நிலைமைகள் உண்டாவதற்குக் காரணமான நிலமும் வித்துக்களுமாகிய அந்தக்கரணத்தைத் தான் அடக்கியாளலாமென்றும், எப்பொழுது அவன் உணர்கின்றானோ, அப்பொழுதே அவன் தனக்கு நியாயமான தலைவனாகின்றான். தன்னை அடக்கியாள்தலையும் தன்னைப் பரிசுத்தப்படுத்தலையும் சிறிது காலமாவது அப்பியசித்துவந்த ஒவ்வொரு மனிதனும், நினைப்பிலிருந்து நிலைமைகள் வளர்கின்றன என்பதைத் தெரிவான்; ஏனெனில், தனது அகநிலைமைகள் எவ்வளவுக்கு எவ்வளவு மாறுபட்டனவோ அவ்வளவுக்கு அவ்வளவு தனது புறநிலைமைகளும் மாறுபட அவன் கண்டிருப்பான். தனது ஒழுக்கத்திலுள்ள குறைகளை நீக்குதற்காக உண்மையுடன் முயற்சிசெய்து விரைவாகவும் விசேஷமாகவும் விர்த்தியாகுங் காலையில் மனிதன் ஒன்றன் பின் ஒன்றாகப் பல நிலைமைகளை அடைகின்றான்.

# நினைப்பும் நிலைமையும்.

ஆன்மா தன்னிடத்து எதனை அந்தரங்கமாக வைத்திருக்கிறதோ, தான் எதனை நேசிக்கிறதோ, தான் எதற்குப் பயப்படுகிறதோ, அதனைக் கவர்கின்றது. அது தனது உயர்ந்த கோரிக்கைகளின் உயர்ந்த ஸ்தானத்திற்கு உயர்கின்றது; அது தனது தாழ்ந்த அவாக்களின் தாழ்ந்த ஸ்தானத்திற்குத் தாழ்கின்றது; அது தனக்குரிய ஸ்தானத்தைப் பெறுதற்குச் சந்தர்ப்பங்கள் கருவிகளாகின்றன.

மனமாகிய நிலத்தில் விதைத்த, அல்லது விழுந்து முளைத்த, ஒவ்வொரு நினைப்பு-வித்தும், விரைவிலாவது தாழ்ப்பிலாவது, தனக்குரிய செயலாக மலர்ந்து பின்னர்த் தனக்குரிய நிலைமையும் சந்தர்ப்பமு மாகிய கனிகளைக் கொடுக்கின்றது. நல்ல நினைப்புக்கள் நல்ல கனிகளையும், கெட்ட நினைப்புக்கள் கெட்ட கனிகளையும் கொடுக்கின்றன.

நிலைமைகளாகிய புறஉலகம் நினைப்பாகிய அகஉலகத்திற்குத் தக்கபடி தன்னைத் திருத்திக்கொள்கின்றது; இன்பத்தைத் தரும் புறநிலைமைகளும் துன்பத்தைத் தரும் புறநிலைமைகளும் முடிவில் ஒருவனுக்கு நன்மை பயக்கும் கருவிகளே. தனக்குரிய விளையுளைத் தானே அறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும். மனிதன் இன்ப துன்பங்களின் மூலமாக அறிவை அடைகின்றான்.

ஒருவன் தன்னை அடிமைகொள்வனவாய்த் தனக்குள் உண்டாகும் அவாக்களையும், நினைப்புக்களையும்,

கோரிக்கைகளையும் (பரிசுத்தமற்ற பாவனைகளாகிய கொள்ளிவாய்ப் பிசாசுகளையோ அல்லது உறுதியான உயர்ந்த முயற்சியாகிய இராஜபாட்டையையோ) பின் பற்றிச் சென்று, முடிவில் அவற்றின் பலன்களைத் தனது புறநிலைமைகளில் அடைகின்றான். வளர்ச்சிக் கும் திருத்தத்திற்கு முரிய நியதிகள் எவ்விடத்தும் உள்ளன.

ஒருவன் கள்ளுக்கடையையோ சிறைச்சாலையை யோ அடைவது ஊழின் அல்லது சந்தர்ப்பத்தின் கொடுமையால் அன்று; ஈனமான நினைப்புக்களும் இழிவான அவாக்களுமே அவனை அவ்விடங்களில் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன. பரிசுத்த மனத்தை யுடைய ஒருவன் குற்றத்திற்கு ஆளாதல் அவனுக்குப் புறத்திலுள்ள எச்சக்தியின் வலியாலும் அன்று; குற்ற நினைப்பு நீடித்தகாலம் அவனது மனத்தில் அந்தரங்க மாகப் பரிபாலிக்கப்பட்டு வந்தது; சந்தர்ப்பம் அந்நினைப் பின் மொத்த சக்தியையும் வெளிப்படுத்திற்று. சந்தர்ப்பம் மனிதனை உண்டுபண்ணுகிறதில்லை; அஃது அவனை அவனுக்குத் தெரிவிக்கின்றது. பாவ நினைப் புக்கள் இல்லாமல் பாவங்களைப் புரிதலும், அதன் பலன் களாகிய துன்பங்களை அநுபவித்தலும் இல்லை; அவ் வாறே, புண்ணிய நினைப்புக்கள் இல்லாமல் புண்ணியங் களைப் புரிதலும், அவற்றின் பலன்களாகிய இன்பங்களை அநுபவித்தலும் இல்லை. மனிதன் தன் நினைப்புக்குத்

தானே கர்த்தனுகையால், தன்னைத் தானுக்கிக்கொள் பவனும் தானே ; தன் நிலைமைகளை உண்டாக்கிக்கொள் பவனும் தானே. பிறக்கும்பொழுதே ஆன்மா தனக் குரிய இடத்தை அடைகின்றது. அது, பூமியில் சஞ் சரிக்கும் காலம் வரையில், தன்னைத் தனக்குக் காட்டு வனவும் தனது சுத்தாசுத்தங்களையும் பலாபலங்களை யும் பிரதிபிம்பித்துக் காட்டுவனவுமான புறநிலைமை களைக் கவர்கின்றது.

மனிதர் தமக்கு வேண்டுவதைக் கவர்வதில்லை ; தம்இயல்பையே கவர்கின்றனர்..அவருடைய மனோபீஷ் டங்களும், மனோராஜ்யங்களும், பேராசைகளும் தத் தம் ஒவ்வோர் அடியிலும் குலைவடைகின்றன. ஆனால், அவரது உள்ளூர்ந்த நினைப்புக்களும் அவாக்களும், தத்தம் நன்மையையோ தீமையையோ உண்டு வளர் கின்றன. "நமக்கு நன்மை தீமைகளைச் செய்யும் தெய்வம்" நம்மிடத்திலேயே இருக்கின்றது. அது நாமே.

மனிதன் தானே தன் கைக்கு விலங்கிட்டுக்கொள் ளுகிறான். நினைப்பும் செயலும் ஊழின் சிறை காவ லர் ; அவை தீயனவாயின் சிறைப்படுத்துகின்றன ; விடுதலை செய்யும் தூதர்களும் அவையே ; அவை நல்ல னவாயின் விடுதலை செய்கின்றன. தான் விரும்புவன வற்றையும் கோருவனவற்றையும் மனிதன் பெறுவ தில்லை ; நியாயமாகத் தேடுவதையே பெறுகிறான்.

அவனது நினைப்புக்களோடும் செயல்களோடும் இணங்கியிருந்தால் மாத்திரமே அவனுடைய விருப்பங்களும் கோரிக்கைகளும் நிறைவேறுகின்றன.

இவ்வுண்மையைக் கொண்டு நோக்குங் காலையில் "நிலைமைகளோடு போராடுதல்" என்பதன் பொருள் யாது? 'மனிதன் காரணத்தைத் தனது அகத்துள் போஷித்து வைத்துக்கொண்டு காரியத்தோடு தனது புறத்தில் போராடுகிறுனென்பதே அதன் பொருள். அக்காரணம் தான் அறிந்து செய்கின்ற ஓர் பாவமாக இருக்கலாம்; அல்லது அறியாது கொண்டுள்ள ஓர் பலஹீன (கெட்டபழக்க) மாக இருக்கலாம். எதுவாயிருப்பினும் அது தன்னைக் கொண்டிருப்பவனது முயற்சிகளை விடாப்பிடியாகப் பின்தள்ளித் தக்க பரிகாரத்தைத் தேடும்படி அலறுகின்றது.

மனிதர் தமது நிலைமைகளைச் சீர்செய்ய விசாரப்படுவதேயன்றி தம்மைச் சீர்செய்ய விரும்புவதில்லை; ஆகவே அவர்கள் எப்பொழுதும் கட்டுண்டிருக்கின்றனர். சரீரப்பிரயாசைக்குப் பின்னடையாதவன் கருதிய காரியத்தைத் தவறுமல் செய்து முடிப்பான். இவ்வுண்மை பரலோக சித்திக்கும் இகலோக சித்திக்கும் ஒக்கும். பொருள் தேடுதலே நோக்கமாக இருப்பவனும், தன் நோக்கம் முற்றுப் பெறுவதற்கு மிகுந்த மெய்வருத்தமுறச் சித்தமாயிருத்தல் வேண்டும். அஃது அவ்வாருயின், எதற்கும் சலியாததும்

சுகதுக்கங்களைச் சமமாகக் கொள்வதுமான வாழ்க்கையை அடைய விரும்புகின்றவன் எவ்வளவு அதிகமாக மெய்வருத்தமுறச் சித்தமாயிருத்தல்வேண்டும்?

இதோ! கொடிய வறுமையுற்ற ஒரு மனிதன் இருக்கிறான். அவன் தனது புறநிலைமைகளும் வீட்டுச் சௌகரியங்களும் சீர்ப்பட வேண்டுமென்று மிகுந்த விசாரம் கொண்டிருக்கிறான்; அவ்வாறிருந்தும், தனக்குக் கூலி போதாதென்ற காரணத்தால் தன் வேலையைச் சரியாகச் செய்யாமல் தனது எஜமானை ஏமாற்ற எத்தனித்தல் நியாயமென்றே எண்ணுகிறான். அத்தகைய மனிதன் க்ஷேமத்துக்கு ஆதாரமான தத்துவங்களின் முதல்பாடமும் அறியாதவன். அவன் தனது வறுமையை ஒழிப்பதற்குத் தகுதியற்றவனாயிருப்பதுமன்றிச் சோம்பலும் வஞ்சகமும் இழிவும் பொருந்திய நினைப்புக்களை நினைத்துக்கொண்டும் செயல்களைச் செய்துகொண்டும் தனது முந்திய வறுமையினும் மிகக்கொடிய வறுமை தன்பால் வந்து சேரும்படி செய்துகொண்டிருக்கிறான்.

இதோ! மிதமிஞ்சிய உணவை உட்கொண்டதனால் உண்டாகி, நீங்காத துன்பத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கின்ற ஒரு வியாதிக்கு இரையாகி வருந்துகின்ற ஒரு செல்வவான் இருக்கிறான். அவன் அவ்வியாதியை ஒழிப்பதற்கு அளவற்ற பணம் செலவு செய்யச் சித்தமாயிருக்கிறான்; ஆனால், அவன் மிதமிஞ்சி உண்பதை

வெறுக்கமாட்டான். தனது இயற்கைக்கு மாறுபட்ட அரிய உணவுகளை உண்ணவும்வேண்டும், ஆரோக்கியமாக இருக்கவும் வேண்டும் என்பது அவனுடைய விருப்பம். அத்தகைய மனிதன் ஆரோக்கியமா யிருப்பதற்கு ஒரு சிறிதும் அருகன் அல்லன், ஆரோக்கிய வாழ்க்கைக்குரிய முதல்பாடத்தையும் இன்னும் கல்லாதவனுதலால்.

இதோ! கூலியாட்களுக்கு விதித்துள்ள வீதப்படி கூலி கொடாமல் தவிர்ப்பதற்குப் பல நெளிவான உபாயங்களைச் செய்துகொண்டும், அதிக லாபத்தை அடையலாமென்ற எண்ணத்தோடு தன்னிடம் வேலை செய்கிற ஆட்களின் கூலிகளைக் குறைத்துக்கொண்டும் வருகின்ற எஜமான் ஒருவன் இருக்கிறான். அவன் செல்வவானுவதற்குச் சிறிதும் தகுதியுடையவன் அல்லன்; பின்னர் அவன் செல்வமும் புகழும் இழந்து கடன்காரனானபோது, தன்னிலைமைக்குத் தானே காரணன் என்பதை உணராது, நிலைமைகளைக் குறைகூறுகிறான்.

தனது நிலைமைகளுக்குத் தானே காரணனென்ற உண்மையையும், தான் புறத்தில் ஒரு நல்ல காரியத்தைக் கருதி முயற்சிக்கின்ற காலையில் தனது அகத்தில் அக்காரியத்திற்குச் சிறிதும் பொருத்தமில்லாத நினைப்புக்களுக்கும் அவாக்களுக்கும் இடங்கொடுத்துத் தனது காரிய சித்தியை இடைவிடாது கெடுத்துக் கொண்டிருக்கிறானென்ற உண்மையையும் விளக்கு

தற்கு உதாரணங்களாக இம்மூன்று விஷயங்களையும் கூறினேன். இவ்வித உதாரணங்கள் எத்தனையோ இன்னும் கூறலாம்; ஆயினும், அஃது ஆவசியகமன்று. ஏனெனில், இதனைப் படிப்பவர் துணிவுகொண்டால், தமது மனத்திலும் வாழ்க்கையிலும் நேரிடும் மாறுதல்களுக்கெல்லாம் நினைப்பின் தத்துவங்களே காரணமென்று ஆராய்ந்தறியலாம். இவ்வாறு அறியும் வரையில் வெளிவிஷயங்கள் மாத்திரம் விசாரணைக்கு ஆதாரமாக மாட்டா.

ஒருவனது ஆன்ம நிலைமை முழுவதையும், அவன் அறிந்திருந்தபோதிலும், மற்றொருவன் அவனதுவாழ்க்கையின் புறத்தோற்றத்தால் மாத்திரமே அறிவது முடியாது. ஏனெனில், நிலைமைகள் சன்னல் பின்னலாகப் பிணைந்தும், நினைப்புக்கள் ஆழ்ந்து வேரூன்றியும், சுகத்திற்குரிய நிலைமைகள் ஒவ்வொருவனுக்கும் வெவ்வேறாகவும் இருக்கின்றன. ஒரு மனிதன் சில விஷயங்களில் யோக்கியதை யுள்ளவனாக இருக்கலாம்; அப்படியிருந்தும் அவன் பல கஷ்ட நஷ்டங்களை அநுபவிக்கலாம். மற்றொரு மனிதன் சில விஷயங்களில் அயோக்கியதையுள்ளவனாக இருக்கலாம்; அப்படியிருந்தும் அவன் மிகுதியான பணத்தைச் சம்பாதிக்கலாம். ஆனால், முந்திய மனிதன் அவனது குறிப்பிட்ட ஒரு யோக்கியதையினால் கஷ்டநஷ்டப்படுகிறானென்றும், பிந்திய மனிதன் அவனது குறிப்பிட்ட ஓர் அயோக்

கியதையினல் பணக்காரனுகிறு னென்றும் மனிதர் வழக்கமாகச் செய்யும் நிர்மானம், ஒரு விஷயத்தில் அயோக்கியனுயிருப்பவன் எல்லா விஷயங்களிலும் அயோக்கியனென்றும் ஒரு விஷயத்தில் யோக்கிய னுயிருப்பவன் எல்லா விஷயங்களிலும் யோக்கியனென் றும் மேலெழுந்தவாறு கொள்ளும் அபிப்பிராயத்தின் முடிவாகும். ஆழ்ந்த அறிவையும் விரிந்த அநுபவத் தையும் கொண்டு நோக்குங்கால், அத்நிர்மானம் பிழை யென்று காணப்படும். அவ் அயோக்கிய மனிதன் மற்றவனிடத்தில் இல்லாத அதிசயிக்கத்தக்க சில நல் லொழுக்கங்களை உடையவனு யிருக்கலாம்; அவ் யோக் கிய மனிதன் மற்றவனிடத்தில் இல்லாத அருவருக்கத் தக்க சில தீய ஒழுக்கங்களை உடையவனுயிருக்கலாம். யோக்கியன் தனது யோக்கியமான நினைப்புக்களுடைய நல்ல பலன்களையும் தனது யோக்கியமான செயல் களுடைய நல்ல பலன்களையும் அடைகிறுன்; அவன் தனது தீய ஒழுக்கங்களால் உண்டாகும் துன்பங்களை யும் அநுபவிக்கிறுன். இது போல, அயோக்கியனும் தனது அயோக்கியதையால் உண்டாகும் துன்பங்களை யும், தனது நல்ல ஒழுக்கங்களால் உண்டாகும் இன்பங் களையும் அடைகிறுன்.

ஒருவன் தனது நல்லொழுக்கத்தினுல் துன் பத்தை அடைகிறுனென்று நினைத்தல் மனிதரின் வீண் பெருமைக்கு உகந்ததாயிருக்கிறது. ஒருவன் தனது அகத்திலிருந்து ஒவ்வொரு கெட்ட நினைப்பையும்,

அசத்திய நினைப்பையும் அசுத்த நினைப்பையும் வேரு டன் கல்லித் தனது ஆன்மாவினின்றும் ஒவ்வொரு பாவ மலத்தையும் ஒழிக்கிறவரையில், அவன் தனது துன்பங்கள் தனது நல்ல குணங்களின் பலன்களென்றும் தீயகுணங்களின் பலன்களல்லவென்றும் அறியவும் சொல்லவும் உரியவனல்லன்; அவன் அப் பரிபூரண தசையை அடைவதற்கு நெடுங்காலம் முன்னர், அதற்குரிய மார்க்கத்தில் செல்லும்போதே, முற்றிலும் நியாயமானதும், ஆதலால் தீமைக்கு நன்மையையும் நன்மைக்குத் தீமையையும் கொடுக்காததுமான பெரியபிரமாணத்தின் செயலைத் தனது மனத்திலும் வாழ்க்கையிலும் கண்டுகொள்வான். அவன் இந்த ஞானத்தை அடைந்தபிறகு, தனது பழைய அறியாமையையும் குருட்டுத்தனத்தையும் கண்டு, தனது வாழ்க்கை எப்பொழுதும் நியாயமாக விதிக்கப் பட்டிருந்ததென்றும், தனது பழைய இன்பதுன்ப அநுபவங்களெல்லாம் பரிணமதசையிலிருந்த தனது ஆன்மாவின் நியாயமான வெளிவேலைகளென்றும் நன்கு தெரிந்துகொள்வான்.

நல்ல நினைப்புக்களும் செயல்களும் ஒரு காலத்திலும் கெட்ட பலன்களைக் கொடுக்கமாட்டா; கெட்ட நினைப்புக்களும் செயல்களும் ஒரு காலத்திலும் நல்ல பலன்களைக் கொடுக்கமாட்டா. விரை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா? எட்டியிலே கட்டுமாம்பழம் உண்ணலாமா? தினை விதைத்தவன்

தினை அறுப்பதும் வினைவிதைத்தவன் வினையறுப்பது மன்றி வேறில்லையே. மனிதர் இந்நியதியை ஸ்தூல உலகத்தில் கண்டு அதனை அநுசரித்து நடக்கின்றனர்; ஆனால், சூக்ஷ்மமாகிய மனோ உலகத்தின்கண்ணும் ஒழுக்க உலகத்தின்கண்ணும் (அங்கும் இந்நியதி எளிதில் உணரத்தக்கதாகவும் மாறுபடாததாகவும் இருந்தும்) இந்நியதியைக் கண்டுணர்பவர் மிகச் சிலரே; ஆதலின், மனிதர் அதனோடு கூடி ஒத்துநடப்பதில்லை.

துன்பம் எவ்வழியிலாவது பிசகாகக் கொண்ட நினைப்பின் காரியமே. அஃது ஒருவன் தன்னோடும் தனது ஜீவ நியதியோடும் ஒத்துநடவாமையை உணர்த்தும் ஓர் அறிகுறி. துன்பத்தால் உண்டாகும் முக்கிய பிரயோஜனம், மனிதனிடத்திலுள்ள அப்பிரயோஜனமும் அசுத்தமுமான எல்லாவற்றையும் எரித்து அவனைச் சுத்தப்படுத்துவதேயாம். எவன் பரிசுத்தனாயிருக்கிறானோ அவனுக்குத் துன்பமென்பதே கிடையாது. களிம்பு நீங்கியபின் தங்கத்தைப் புடம்போட யாதொரு காரணமும் இல்லை; அது போலவே, பூரண பரிசுத்தத்தையும் ஞானத்தையும் அடைந்தவன் துன்பமடைய யாதொரு காரணமும் இல்லை.

ஒருவனுக்குத் துன்பத்தைக் கொடுக்கின்ற நிலைமைகள் அவனது மனத்தின்கண்ணுள்ள நேர்மையின்மையின் பலன்கள்; ஒருவனுக்கு இன்பத்தைக் கொடுக்கின்ற நிலைமைகள் அவன் மனத்தின்கண்

னுள்ள நேர்மையின் பலன்கள். சரியான நினைப்பின் அளவுகருவி இன்பம் அநுபவித்தலே யன்றிப் பொருளுடைமை யன்று; பிசகான நினைப்பின் அளவுகருவி துன்பம் அநுபவித்தலே யன்றிப் பொருளின்மை யன்று. ஒருவன் தனவந்தனாயினும் துன்பமே அநுபவித்திருக்கலாம். மற்றொருவன் தரித்திரனாயினும் இன்பமே அநுபவித்திருக்கலாம். தனத்தை விவேகத்தோடு சரியான வழியில் விநியோகித்தால் மாத்திரமே, செல்வமும் இன்பமும் ஒருவனிடத்தில் சேர்ந்திருக்கும். தரித்திரன் தனது நிலைமைகள் அநியாயமாகத் தன் மேல் சுமத்தப்பட்டவை யென்று நினைக்குந்தோறும் அதிக துன்பத்தில் அழுந்துகிறான்.

இன்பம் நுகராமையும் துன்பத்தின் காரணமே. மிதமிஞ்சி இன்பம் நுகர்தலும் துன்பத்தின் காரணமே. இவ்விரண்டும் இயற்கைக்கு விரோதமானவை; இவை மனத்தடுமாற்றத்தின் பலன்கள். ஒருவன் சந்தோஷத்தையும் ஆரோக்கியத்தையும் செல்வத்தையும் பெறுகிறவரையில், அவனுக்குச் சரியான நிலைமை ஏற்படவில்லை என்பது நிச்சயம்; சுற்றுச் சார்புகளோடு இணங்கி உள்ளும் புறமும் ஒத்திருப்பதால், சந்தோஷமும் ஆரோக்கியமும் செல்வமும் உண்டாகின்றன.

ஒருவன் தன் நிலைமையைப்பற்றிச் சிணுங்குதலையும் நிந்தித்தலையும் விட்டுத் தனது வாழ்க்கையை நடாத்தும் (காட்சிக்குப் புலப்படாத) நீதியை ஆராய

ஆரம்பிக்கிற பொழுதுதான் மனித இயல்பை உடையவனாகிறான். அவன் அந்த நீதிக்குத்தக்கபடி தனது மனத்தை இசைத்துக்கொள்ளும்போது, தனது நிலைமைக்கு, மற்றவர் காரணரென்று குற்றம் சாட்டலைவிட்டு, மேன்மையும் உறுதியுமுள்ள நினைப்புக்களைக் கொண்டு பிரவர்த்திக்கிறான்; தவிரவும், தனது நிலைமைகளோடு போராடுதலைவிட்டுத் தான் விரைவில் அபிவிர்த்தியடையும்படி, தனது நிலைமைகளைத் துணைக்கருவிகளாகவும் தனக்குள் மறைந்துகிடக்கும் சக்திகளையும் திறமைகளையும் கண்டுபிடிப்பதற்கு அவைகளைச் சாதனங்களாகவும் உபயோகித்துக்கொள்ள ஆரம்பிக்கிறான்.

பிரபஞ்சத்தில் முதன்மையாக நிற்கும் சக்தி ஒழுங்கேயன்றிக் குழப்பமன்று; வாழ்க்கையின் உயிர்நிலை நீதியேயன்றி அநீதியன்று; உலகத்தில் ஆன்மார்த்தத்தைச் சீர்ப்படுத்தி நடத்திவரும் சக்தி தருமமேயன்றி அதருமமன்று. இஃது இங்ஙனமிருப்பதால், பிரபஞ்சம் சரியாயிருக்கிறதென்று காண்பதற்கு மனிதன் தன்னைத் திருத்திக்கொள்ளவேண்டும். தன்னைத் திருத்துங் காலையில், அவன் பொருள்களைப் பற்றியும் மற்றவர்களைப் பற்றியும் தனது நினைப்புக்களை எவ்வாறு மாற்றுகிறானோ அவ்வாறே பொருள்களும் மற்றவர்களும் தன்னிடத்து மாறுதலுறக் காண்பான்.

இவ்வுண்மைக்குச் சான்று ஒவ்வொரு மனிதனிடத்திலும் உண்டு; கிரமமாக அகத்துள் பார்த்தலாலும்,

## நினைப்பும் நிலைமையும்.

தன்னைப் பகுத்துப் பார்த்தலாலும், அதனை எளிதில் காணலாம். ஒருவன் தனது நினைப்புக்களை அடியோடு மாற்றிவிட்டால், உடனே அஃது அவனுடைய புறநிலைமைகளில் உண்டுபண்ணும் விரைவான மாறுதல்களைக் கண்டு, அவன் ஆச்சரியம் அடைவான். மனிதர் நினைப்பை அந்தரங்கமாக அடக்கிவைத்துக்கொள்ளலாமென்று கருதுகின்றனர்; அது முடியாது. நினைப்பு விரைவில் பழக்கமாகின்றது; பழக்கம் விரைவில் நிலைமையின் உருவை அடைகின்றது. மிருகத்தனமான நினைப்புக்கள் மதுவுண்டலும் காமநுகர்ச்சியுமாகிய பழக்கங்களாகின்றன; அப்பழக்கங்கள் வறுமையும் வியாதியுமாகிய நிலைமைகளின் உருக்களை அடைகின்றன: பலவகை அசுத்த நினைப்புக்களும் தளர்ச்சியையும் குழப்பத்தையும் கொடுக்கும் பழக்கங்களாகின்றன; அப்பழக்கங்கள் கேடும் தவறுமாகிய நிலைமைகளின் உருக்களை அடைகின்றன. பயமும் சந்தேகமும் சஞ்சலமும் பொருந்திய நினைப்புக்கள் பலஹீனமும் உறுதியின்மையும் தீர்மானமின்மையுமான பழக்கங்களாகின்றன; அப்பழக்கங்கள் தோல்வியும் வறுமையும் அடிமைத்தனமுமாகிய நிலைமைகளின் உருக்களை அடைகின்றன. சோம்பலான நினைப்புக்கள் அசுத்தமும் அயோக்கியமும் பொருந்திய பழக்கங்களாகின்றன; அப்பழக்கங்கள் பிணியும் இரத்தலுமாகிய நிலைமைகளின் உருக்களை அடைகின்றன. வெறுப்பும் குற்றங்காண்டலும் பொருந்திய நினைப்புக்கள் குற்றம்

சாட்டுதலும் தாக்குதலுமாகிய பழக்கங்களாகின்றன; அப்பழக்கங்கள் துன்பமுறுதலும் தாக்கப்படுதலுமாகிய நிலைமைகளின் உருக்களை அடைகின்றன. பலவித சுயநய நினைப்புக்களும் சுயலாபத்தை நாடும் பழக்கங்களாகின்றன; அப்பழக்கங்கள் கொஞ்சம் ஏறக்குறையக் கஷ்டங்களை உண்டாக்கும் நிலைமைகளின் உருக்களை அடைகின்றன. ஆனால், பலவகை நல்ல நினைப்புக்களும் அன்புசெலுத்துதலும் அருள்புரிதலு மாகிய பழக்கங்களாகின்றன; அப்பழக்கங்கள் மனோகரமும் குதூகலமுமான நிலைமைகளின் உருக்களை அடைகின்றன. பரிசுத்த நினைப்புக்கள் மிதமாக அநுபவித்தலும் தன்னை யடக்கியாளுதலுமாகிய பழக்கங்களாகின்றன; அப்பழக்கங்கள் சாந்தமும் சமாதானமு மாகிய நிலைமைகளின் உருக்களை அடைகின்றன. தைரியமும் தன்பொறுப்பும் திடமும் பொருந்திய நினைப்புக்கள் ஆண்மைக்குரிய பல பழக்கங்களாகின்றன; அப்பழக்கங்கள் வெற்றியும் நிறைவும் சுவாதீனமு மாகிய நிலைமைகளின் உருக்களை அடைகின்றன. ஊக்க நினைப்புக்கள் சுத்தமும் உழைப்பு மாகிய பழக்கங்களாகின்றன; அப்பழக்கங்கள் இன்பத்தைத் தரும் நிலைமைகளின் உருக்களை அடைகின்றன. மென்மையும் பொறுமையும் பொருந்திய நினைப்புக்கள் சாந்தமான பழக்கங்களாகின்றன; அப்பழக்கங்கள் காப்பையும் வாழ்வையும் நல்குகின்ற நிலைமைகளின் உருக்களை அடைகின்றன. அன்பும் பரோபகாரமும் பொருந்திய

நினைப்புக்கள் மற்றவர்க்காகத் தன்னை மறக்கும் பழக்கமாகின்றன; அப்பழக்கம் நிலைவரமான சீரும் செல்வமு மாகிய நிலைமைகளின் உருக்களை அடைகின்றது.

விடாப்பிடியாய்க் கொண்டுள்ள ஒருவகை நினைப்பின் தொடர், அது நல்லதாயினும் கெட்டதாயினும், தனது பலன்களை மனிதனது ஒழுக்கத்திலும் நிலைமைகளிலும் உண்டுபண்ணாமல் போகாது. ஒருவன் விரும்புகின்ற நிலைமைகளை நேராகக் கொள்ள முடியாது; ஆனால், அவற்றை அளிக்கத்தக்க நினைப்புக்களைக் கைக்கொண்டு, அவற்றின் மூலமாக அந்நிலைமைகளை நிச்சயமாக ஆக்கிக்கொள்ளலாம்.

ஒவ்வொரு மனிதனும் மிகுதியாகப் பேணிவருகின்ற நினைப்புக்கள் நிறைவேறுதற்குப் பிரகிருதி உதவிபுரிகின்றது; அன்றியும், அது நல்ல நினைப்புக்களையும் கெட்ட நினைப்புக்களையும் விரைவில் வெளிப்படுத்தத்தக்க சந்தர்ப்பங்களையும் உண்டுபண்ணுகின்றது.

ஒருவன் தனது பாவ நினைப்புக்களைத் தவிர்த்துவிட்டால், உடனே உலகம் முழுவதும் அவனிடத்துப் பிரியமுடையதாகி அவனுக்கு உதவிபுரிய முன்வரும். ஒருவன், பலஹீனமாய்க் கேவலமான தனது நினைப்புக்களை ஒழித்துவிட்டால், உடனே அவனது உறுதியான நியமனங்களை நிறைவேற்றப் பல பக்கங்களிலும் சந்தர்ப்பங்கள் உற்பவிக்கும். ஒருவன் நல்ல நினைப்புக்களைப் பேணிவந்தால், துன்பத்தையும் அவமா

னத்தையும் உண்டாக்காமல், கெட்ட விதி அவனைவிட்டுப் பறந்துபோய்விடும். பல நிற உருவங்களைக் காட்டும் (காலிடாஸ்கோப் என்னும்) கண்ணாடியை ஒத்தது உலகம். நிமிஷத்துக்கு நிமிஷம் வெவ்வேறு விதமாகும் உலகத்தோற்றங்களெல்லாம், இடைவிடாமல் சலித்துக் கொண்டிருக்கும் உங்கள் நினைப்புக்களின் பிரதிபிம்பப் படங்களே.

வெண்பா.

எந்நிலைமை நீஅடைய எண்ணுவையோ நின்னுள்ளுள்,
அந்நிலைமை நீஅடைவாய் அப்பொழுதே ;- தந்நிலைமை
தந்ததென்பர் தோல்வியெலாம் *சாரமிலார்; நின்றுநகும்
பந்தமில்ஆன் மாஅவரைப் பார்த்து.

காலமொடு தேசம் கடந்துநிற்கும் ஆன்மாநின்
மூலவிதி யைவென்று முன்செல்லும் ;—*பாலின்
நிலைமைகளைக் கீழ்ப்படுத்தி நீள்அடிமை ஆக்கித்
தலைமையுறும் பல்லவற்றும் சார்ந்து.

காண்டற் கரிய கனசத்தி யாயமனம்
ஈண்டரிய ஆன்மாவின் இன்மகவாம் ;—வேண்டும்
நிலைபலவும் எய்தஅது நேர்வழியை ஆக்கும்,
மலைபலவும் * ஊடறுத்து மாய்த்து.

* தாழ்ப்பினைக் கண்டு தளர்வுறுய் ; உள்ளேமெய்க்
† காழ்ப்பினைக் காண்பார்போல் காத்திருப்பாய்-காழ்ப்புருவ
ஆன்மா எழுந்துளத்தை ஆளுங்கால் செய்வர்பணி
வான்மா அமரரும்முன் வந்து.

* சாரம் இல்லார் = அறிவில்லார்.
* பாலின் = ஊழால் வந்த.
* ஊடு அறுத்து = நடுவே அறுத்து.
* தாழ்ப்பு = தாமதம். † காழ்ப்பு = அறிவு.

## நினைப்பும் சரீரமும் ஆரோக்கியமும்.

மனம் ஆண்டான் : சரீரம் அடிமை. முன்னாலோ சிந்தையோடாவது தன்னியல்பிலாவது மனம் கொள்கின்ற நினைப்புக்களை ஒட்டியே சரீரம் நடக்கின்றது. தீய நினைப்புக்களாலும் விசன நினைப்புகளாலும் சரீரம் பிணியையும் அழிவையும் விரைவில் அடைகின்றது. நல்ல நினைப்புக்களாலும் சந்தோஷ நினைப்புக்களாலும் சரீரம் யௌவனத்தையும் அழகையும் பெறுகின்றது.

வியாதியும் ஆரோக்கியமும் நிலைமைகளைப் போலவே, நினைப்பில் வேரூன்றியிருக்கின்றன. கேவல நினைப்புக்களை வியாதியுள்ள சரீரம் வெளிப்படுத்தும். அச்சத்தாலுண்டாகும் நினைப்புக்கள், மனிதனை ஒரு வெடிகுண்டு எவ்வளவு துரிதத்தில் கொல்லுமோ அவ்வளவு துரிதத்தில், கொல்லக் கண்டிருக்கிறோம். அவ்வளவு வேக மில்லாவிட்டாலும் அவை வெடிகுண்டுபோலவே அநேக மனிதர்களை இடைவிடாது கொன்று கொண்டிருக்கின்றன. வியாதி வருமோ என்று பயப்படுகின்றவர்களே வியாதியை அடைகின்றவர்கள். மனக்கவலை, சரீரம் முழுவதிலும் விரைவில் தடுமாற்றமுண்டாக்கி, வியாதி வருவதற்கு வழிசெய்துவைக்கின்றது. பரிசுத்தமற்ற நினைப்புக்களைச் சரீரம் நிறைவேற்றாவிட்டாலும், அவை நரம்பு மண்டலத்தைச் சீக்கிரத்தில் தகர்த்துப் பின்னப்படுத்திவிடும்.

# மனம் போல வாழ்வு.

பலமும் சுத்தமும் சந்தோஷமும் பொருந்திய நினைப்புக்கள் சரீரத்துக்கு ஊக்கத்தையும் ஆரோக்கியத்தையும் அழகையும் கொடுக்கின்றன. சரீரம் மென்மையுள்ளதும் எப்படி வேண்டினாலும் அப்படி வளையத்தக்கதுமான ஒரு கருவி; அதில் எந்த நினைப்புக்கள் பதிகின்றனவோ அந்த நினைப்புக்களோடு அஃது இணங்கி நடக்கின்றது; பழக்கங்களாக மாறிய நினைப்புக்கள், தமது நல்ல பலன்களையோ கெட்ட பலன்களையோ, சரீரத்தில் உண்டுபண்ணுகின்றன.

மனிதர்கள் எவ்வளவு காலம் அசுத்த நினைப்புக்களைக் கொண்டிருக்கிறார்களோ அவ்வளவு காலமும் அசுத்தமும் விஷமும் கலந்த இரத்தத்தைக் கொண்டிருப்பார்கள். சுத்த ஹிருதயத்திலிருந்து சுத்த வாழ்க்கையும் சுத்த சரீரமும் உண்டாகின்றன. செயல், வாழ்வு, தோற்றம் என்பவைகளுக்கு நினைப்பே ஊற்றுக்குழி; ஊற்றைச் சுத்தப்படுத்தினால் அனைத்தும் சுத்தமாயிருக்கும்.

தனது நினைப்புக்களை மாற்றிக்கொள்ளாதவன் தனது உணவுகளை மாற்றிக்கொள்வதால் பயனில்லை; தனது நினைப்புக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவன் அசுத்த உணவை விரும்பமாட்டான்.

சுத்த நினைப்புக்கள் சுத்தபழக்கங்களை உண்டுபண்ணுகின்றன. மகாத்துமா என்று சொல்லப்படுவோன், உடம்பு குளிக்காவிட்டால் மகாத்துமா அல்லன். தனது நினைப்புக்களைப் பலப்படுத்திச் சுத்தஞ்செய்து

கொண்டவன் பிணிப்பூச்சிகளுக்குப் பயப்படவேண்டிய நிமித்தம் இல்லை.

நீங்கள் உங்கள் சரீரத்தைப் போற்ற விரும்புவீர்களாயின், உங்கள் மனத்தைப் போற்றுங்கள்; உங்கள் சரீரத்தைப் புதுப்பிக்க விரும்புவீர்களாயின், உங்கள் மனத்தைச் சுத்தப்படுத்திக்கொள்ளுங்கள். பகைமையும் பொறாமையும் ஆசாபங்கமும் ஏக்கமும் பொருந்திய நினைப்புக்கள் சரீரத்தினின்றும் அதன் ஆரோக்கியத்தையும் அழகையும் பறித்துக்கொள்கின்றன. கடுகடுத்த முகம் இயற்கையாக உண்டாவதன்று; அது கடுகடுத்த நினைப்புக்களாலேயே உண்டாகிறது. முகத்தின் அழகைக் கெடுக்கும் திரைகள் மடமையாலும் காமக்குரோதங்களாலும் கர்வத்தாலும் உண்டாகின்றன.

யான் தொண்ணூற்றாறு வயதுள்ள ஒரு ஸ்திரீயை அறிவேன்; அவளுடைய முகம் பன்னிரண்டு வயதுள்ள ஓர் பாலிகையின் முகத்தைப்போலக் குற்றமற்றதாகவும் பிரகாசமுள்ளதாகவும் விளங்குகின்றது. யான் ஒரு யௌவன புருஷனை அறிவேன்; அவனுடைய முகம் ஓர் வயோதிகனுடைய முகத்தைப்போல மிகவும் அந்தவிகாரமாயிருக்கிறது. இவற்றில் ஒன்று பிரகாசமும் இனிமையுமுள்ள மனவிர்த்தியின் பயனாக உண்டாயிருக்கிறது; மற்றொன்று காமக்குரோதமும் அதிருப்தியுமுடைய மனவிர்த்தியின் பயனாக உண்டாயிருக்கிறது.

அறைகளுக்குள் காற்றும் வெளிச்சமும் ஏராளமாகச் சென்றாலன்றி, உங்கள் வாசஸ்தலம் இன்பத்தையும் சுகத்தையும் நல்காது, உங்கள் அகத்துள் சந்தோஷமும் நல்லெண்ணமும் சாந்தமும் பொருந்திய நினைப்புக்களைக் கொண்டாலன்றி, உங்கள் சரீரம் ஆரோக்கியமும உரமும் பெற்றிராது: உங்கள் முகம் பிரகாசமும் அழகும் இனிமையும் பொருந்தியிராது.

வயோதிகர்களுடைய முகங்களில் இரக்கத்தால் உண்டான திரைகளும், பலமும் பரிசுத்தமும் பொருந்திய நினைப்பால் உண்டான திரைகளும், காமக்குரோதங்களால் உண்டான திரைகளும் இருக்கின்றன; இவற்றைப் பிரித்து அறியமாட்டாதார் யார்? நல்லொழுக்கத்தில் வாழ்நாளைக் கழித்தவர்களுக்கு, விருத்தாப்பிய தசை, அஸ்தமிக்கும் சூரியனைப் போன்று, சாந்தமும் சமாதானமும் இனிமையும் பொருந்தியிருக்கும். யான் சில காலத்துக்கு முன்னர் ஒரு தத்துவஞானியை அவரது மரணப்படுக்கையில் பார்த்தேன்; வயது முதிர்ந்ததேயன்றி, அவருக்கு விர்த்தாப்பியம் உண்டாகவில்லை; அவர் எவ்வளவு இன்பத்தோடும் சமாதானத்தோடும் வாழ்ந்திருந்தனரோ அவ்வளவு இன்பத்தோடும் சமாதானத்தோடும் இறந்தனர்.

சரீரத்தின் வியாதிகளை நீக்குதற்கு மனஉற்சாகமுள்ள நினைப்புக்குச் சமமான வைத்தியன் இல்லை; கவலையையும் துக்கத்தையும் போக்குதற்கு நன்மனம் போன்ற நட்பு வேறில்லை. ஒருவன் பகைமையும்

இகழ்ச்சியும் சந்தேகமும் பொறாமையும் பொருந்திய நினைப்புக்களில் இடைவிடாது வாழ்ந்துகொண்டிருத்தல், தானே உண்டாக்கிக்கொண்ட சிறையில் அடைபட்டிருத்தலை ஒக்கும். ஆனால், எல்லோரையும் நல்லவராக நினைத்தலும், எல்லோரோடும் உற்சாகமாயிருத்தலும், எல்லோரிடத்துமுள்ள நன்மைகளைக் கண்டறியப் பொறுமையுடன் முயலுதலுமாகிய சுயநயமற்ற செயல்களே மோக்ஷவீட்டின் வாயிலாகும்; ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பிராணியிடத்திலும் சமாதானமான நினைப்புக்களைக் கொண்டு வாழ்தல் அந்நினைப்புக்களை உடையார்க்கு அளவற்ற அமைதியைக் கொடுக்கும்.

"அறவி னைக்கும் அரும்பொருள் இன்பொடு
பெறுவ தற்கும் பெருங்கல்வி கற்றுயர்
விறலி னுக்கும்நல் வீரம் தனக்கும்ஒண்
துறவி னுக்கும் துணைமனம் என்பவே."

## நினைப்பும் காரியமும்.

நினைப்பைக் காரியத்துடன் சம்பந்தப்படுத்தினு லொழிய, விவேகமான காரியசித்தி யொன்றையும் அடைதல் முடியாது. பெரும்பாலார் வாழ்க்கையாகிய ச்முத்திரத்தில் நினைப்பாகிய படகை அதன் போக்கில் விட்டுவிடுகின்றனர். இன்ன காரியத்தைச் செய்துமுடிக்க வேண்டுமென்ற இலக்கில்லாதிருத்தல் பாவமாகும்; தனக்கு அழிவும் ஆபத்தும் வராமலிருக்க விரும்புகிறவன் யாதோர் இலக்குமின்றி இருத்தல் கூடாது.

எவர் தமது வாழ்க்கையில் யாதொரு காரியத்தையும் இலக்காகக் கொள்ளாதிருக்கின்றனரோ அவர் பலஹீனத்தின் அறிகுறிகளாகிய சில்லறைத் தொந்தரவுகளுக்கும் அச்சங்களுக்கும் துன்பங்களுக்கும் இரங்கல்களுக்கும் எளிதில் இரையாவர். அப்பலஹீனக் குறிகள், மனதாரச் செய்யும் பாவங்களைப்போல், எவ்விதத்திலாவது தோல்வியையும் நஷ்டத்தையும் துக்கத்தையும் உறும்படி செய்யும். ஏனெனில், பலத்தை விர்த்தி செய்துகொண்டிருக்கிற பிரபஞ்சத்தில் பலஹீனம் நீடித்துநிற்பதுமுடியாது.

ஒருவன் ஒரு நியாயமான காரியத்தைத் தன் ஹிருதயத்தில் குறிப்பிட்டுக்கொண்டு, அதனைச் செய்து முடிக்க முயற்சி செய்யவேண்டும். அவன் தனது நினைப்புக்களுக்கு அக்காரியத்தை உயிர்நிலையாகக் கொள்ளவேண்டும். அஃது, அவனுடைய அக்கால சுபாவத்தின் பிரகாரம், ஒரு வைதிக காரியமாகவோ

லௌகிக காரியமாகவோ இருக்கலாம்; ஆனால், அஃது எஃதாயிருப்பினும், அதனிடத்தில் அவனது நினைப்பின் சக்திகளை யெல்லாம் உறுதியாக ஒருமுகப்படுத்த வேண்டும். அக்காரியத்தைத் தனது பிரதான கடமையாகக் கொண்டு, கணத்தில் அழிந்துபோகும் மனோ விருப்பம் மனோ ராஜ்ஜியம் மனோபாவனை முதலியவற்றில் தனது நினைப்புக்களைத் திரியவிடாமல், அதனைச் செய்துமுடித்தற்கு முயலுதல்வேண்டும். இதுதான் தன்னடக்கத்திற்கும் மனஏகாக்கிரத்திற்கும் நல்லவழி. தான் கருதியுள்ள காரியத்தைச் செய்துமுடித்தலில் பலமுறை தவறினும் (பலஹீனம் நீங்கி பலம்பெறுகிற வரையில் தவறுவது சகசமே) அவன் அடையும் ஒழுக்கத்தின் பலம் அவனுடைய உண்மையான வெற்றியின் அளவையாக இருக்கும்; இஃது, அவன் எதிர்காலத்தில் பெறும் சக்திக்கும் வெற்றிக்கும் ஓர் புதிய ஆரம்ப ஸ்தானமாகும்.

ஒரு பெரிய காரியத்தைச் செய்துமுடிக்கத் தக்க திறமை இல்லாதவர், தமது கடமையை, அஃது எவ்வளவு சிறியதாகத் தோன்றினும், குறைவின்றிச் செய்து முடிப்பதில் தமது நினைப்புக்களை யெல்லாம் செலுத்த வேண்டும். இவ்வழியே நினைப்புக்களைச் சேர்த்து ஒருமுகப்படுத்தவும், ஊக்கத்தையும் மனவுறுதியையும் வளர்க்கவும் செய்யும்; இவற்றைச் செய்து முடித்த பின்னர் அவரால் செய்துமுடிக்க முடியாத காரியம் ஒன்றுமே இராது.

## மனம் போல வாழ்வு.

மிக்க பலஹீனமுள்ள ஒருவன், தனது பலஹீனத்தை அறிந்தும், பலம் முயற்சியினாலும் அப்பியாசத்தினாலும் மாத்திரம் விர்த்தியாகும் என்ற உண்மையை நம்பியும், அந்நம்பிக்கையோடு அப்பொழுதே முயற்சிசெய்ய ஆரம்பித்து, முயற்சியின்மேல் முயற்சியையும் பொறுமையின்மேல் பொறுமையையும் பலத்தின்மேல் பலத்தையும் சேர்ப்பானாயின், அவன் இடைவிடாது விர்த்தியாகிக்கொண்டேபோய் முடிவில் தெய்வபலத்தை அடைவான்.

சரீரபலம் இல்லாதவன் இடைவிடாமல் பொறுமையோடு சரீரப்பயிற்சி செய்து தன்னைப் பலசாலியாகச் செய்துகொள்ளுதல் போலப் பலஹீன நினைப்புக்களை யுடையவன் சரியான நினைப்புக்களை நினைக்கப் பழகித் தனது நினைப்புக்களைப் பலமுடையன வாக்கிக் கொள்ளலாம்.

இலக்கில்லாமையையும் பலஹீனத்தையும் நீக்குதலும், காரியத்தை முன்னிட்டு நினைக்க ஆரம்பித்தலுமாகிய இவ்விரண்டும், தோல்வியைக் காரியசித்திக்குரிய வழிகளில் ஒன்றாகக் கருதுபவருடைய கூட்டத்திலும், சகல நிலைமைகளையும் தமக்குப் பொருந்துமாறு செய்து கொள்பவருடைய கூட்டத்திலும், உறுதியாக நினைத்து அச்சமின்றித் தொடங்கித் திறமையாகச் செய்து தங்கள் காரியத்தை முடிப்பவருடைய கூட்டத்திலும் பிரவேசிக்கச் செய்யும்.

## நினைப்பும் காரியமும்.

ஒருவன் தான் செய்து முடிக்கவேண்டிய காரியத்தைத் தீர்மானித்துக்கொண்ட பின்னர், அதனைச்செய்து முடித்தற்குரிய நேர் வழியை மனத்தில் குறித்துக் கொண்டு இப்படி அப்படி பிறழாமல் அவ்வழியில் செல்லவேண்டும்; ஐயங்களையும் அச்சங்களையும் பரிஷ்காரமாக நீக்கிவிடவேண்டும்; அவை முயற்சியின் நேர் வழியைக் கோணலாக்கிப் பயனற்றதாகவும் பிரயோஜனமற்றதாகவும் செய்கின்றவை. ஐயமும் அச்சமும் பொருந்திய நினைப்புக்கள் ஒரு காலத்தும் ஒன்றையும் செய்து முடித்ததுமில்லை, செய்து முடிக்கப்போவதுமில்லை. அவை எப்பொழுதும் தோல்வியையே அடையச் செய்யும். ஐயமும் அச்சமும் வந்து சேர்ந்தவுடனே காரியமும் ஊக்கமும் ஆற்றலும் உறுதியான நினைப்பும் அழிந்துபோகின்றன.

ஒரு காரியத்தைச் செய்ய எழும் விருப்பம் நாம் அதனைச் செய்து முடித்தல் கூடும் என்ற அறிவினால் உண்டாகின்றது. ஐயமும அச்சமும் அறிவின் பெரிய விரோதிகள்; அவற்றிற்கு இடம் கொடுத்து அவற்றை அழிக்காது விட்டால் தான் செல்லும் வழியில் தன்னை அவை அடிதோறும் தடுத்துக்கொண்டிருக்கும்.

ஐயத்தையும் அச்சத்தையும் வென்றவனுக்கு தோல்வியென்பதே கிடையாது. அவனது ஒவ்வொரு நினைப்பும் மிகுந்த வலிமையைக் கொண்டிருக்கின்றது. அவன் சகல கஷ்டங்களையும் தைரியத்தோடு எதிர்த்து

விவேகத்தோடு ஜயிக்கின்றான். அவனது காரியங்களாகிய செடிகள் தக்க பருவத்தில் நடப்பட்டிருக்கின்றன. அவை மலர்ந்து வெம்பிஉதிராத கனிகளைக் கொடுக்கின்றன.

காரியத்தோடு நிர்ப்பயமாகச் சேர்க்கப்பட்ட நினைப்பு சிருஷ்டி செய்யும் ஓர் சக்தியாகின்றது; எவன் இதனை அறிகிறானோ அவன் அசைந்துகொண்டிருக்கிற நினைப்புக்களும் ஓடிக்கொண்டிருக்கிற உணர்ச்சிகளும் சேர்ந்துள்ள ஒரு வெறும் சுமையாயிராது மேன்மையும் பலமு முள்ளவனுவான்; எவன் இதனைச் செய்கிறானோ அவன் தனது மனோசக்திகளை விவேகத்தோடும் அறிவோடும் கையாள்கிறவனாகின்றான்.

“ நல்ல செய்து நரரை யுயர்த்தவும்
அல்ல செய்யதங் களற்றிடை யாழ்ப்பவும்
வல்ல திந்த மனமல தையனே
இல்லை யென்ன இயம்பும் மறையெலாம்.”

## நினைப்பும் காரியசித்தியும்.

ஒரு மனிதன் செய்து முடிப்பனவும், செய்து முடிக்கத் தவறுவனவும், அவனது நினைப்பின் நேரான பலன்கள். சமநிலை இழந்தமேல சர்வநாசம் எனக் கொள்ளத்தக்கதாக நியாயமான நியதியேற்பட்டு நடக்கும் பிரபஞ்சத்தில், அவனவன் செய்கைக்கு அவனவன் பொறுப்பாளி யென்பது தீர்மானம். ஒருவனது பலஹீனமும் பலமும், சுத்தமும் அசுத்தமும், அவனால் உண்டானவையே; மற்றொருவனால் உண்டானவையல்ல. ஆகவே அவைகளை மாற்றக்கூடியவன் அவனே; மற்றொருவ னல்லன். அவனது நிலைமையும் அவன் தேடிக்கொண்டதே; மற்றொருவன் தேடிய தன்று. அவனது துன்பமும்இன்பமும் அகத்திலிருந்தே வெளி வந்தவை. அவன் எங்ஙனம் நினைக்கிறானோ அங்ஙனமே இருக்கிறான்; அவன் எங்ஙனம் நினைத்துவருகிறானோ அங்ஙனமே இருந்துகொண்டிருக்கிறான்.

ஒரு பலஹீனன் ஒரு பலவானிடத்தில் உதவிபெற விரும்பினாலன்றி, பலவான் அவனுக்கு உதவிசெய்தல் முடியாது. அப்படி உதவி பெற்றாலும்,பலஹீனன் தானாகவே பலவானாதல் வேண்டும். அவன் மற்றொருவனிடத்தில் கண்டதிசயிக்கும் பலத்தைத் தன் சொந்த முயற்சியால் அடையவேண்டும்: தன்னிலைமையைத் தானே மாற்றிக்கொள்வதன்றி வேறெவனும் மாற்றுவது முடியாது.

மனிதர் "ஒருவன் ஹிம்சிக்கிறவனு யிருக்கிறபடி யால் அநேகர் அடிமைகளாயிருக்கின்றனர். நாம் ஹிம் சிக்கிறவனை விரோதிப்போம்." என்று நினைப்பதும் சொல்வதும் வழக்கம். ஆனாலும், தற்காலத்தில் சிலர் (இவர்கள் தொகை நாளுக்குநாள் பெருகிவருகின்றது) இந்தக் கொள்கையைத் தவிர்த்து, "அநேக ஜனங்கள் அடிமைகளாயிருப்பதால் ஒருவன் ஹிம்சிக்கிறவனு யிருக்கிறான்: நாம் அவ்வடிமைகளை இகழ்வோமாக." என்கிற கொள்கையை மேற்கொண்டு வருகின்றனர். உண்மையை நோக்குமிடத்தில் ஹிம்சிப்பவனும், அடி மையும் மடமையில் ஒருவர்க்கொருவர் உதவிபுரிகின் றனர்: அவர்கள் ஒருவரையொருவர் துன்பப்படுத்து வதாகத் தோன்றினும், அவர்கள் உண்மையில் தம்மைத் தாமே துன்பப்படுத்திக்கொள்கின்றனர். ஹிம்சிக்கப் பட்டவனது பலஹீனமும் ஹிம்சிக்கிறவனது துர்விநி யோகமான சக்தியும், நியதியின் செய்கைக்குத் துணைக் காரணமென்று மெய்யறிவு காண்கின்றது; இவ் விரண்டு நிலைமைகளாலும் உண்டாகிற துன்பத்தைப் பார்த்து மெய்யன்பு ஒன்றின்மீதும் குற்றங்காணுமை யிருக்கின்றது; ஹிம்சிக்கிறவன் ஹிம்சிக்கப்படுகிறவன் ஆகிய இருவரையும் மெய்யருள் மார்போடு அணைத் துக்கொள்கின்றது.

பலஹீனத்தை ஜயித்து சுயநய நினைப்புக்களெல் லாவற்றையும் ஒழித்துவிட்டவன் ஹிம்சிக்கிறவனோ

யாவது ஹிம்சிக்கப்படுகிறவனையாவது சேர்ந்தவன் அல்லன்; அவன் சுயாதீனன்.

ஒருவன் தனது நினைப்புக்களை; மேம்படுத்தினால் மாத்திரமே உயர்வும் வெற்றியும் காரியசித்தியும் பெறுதல் கூடும். தனது நினைப்புக்களை மேம்படுத்தாது பின்னிட்டால், அவன் பலஹீனமும் கீழ்மையும் தரித்திரமும் உற்றேயிருப்பான்.

லௌகிக காரியங்களிலும் கூட ஏதாவது சித்தி பெறுவதானால், ஒருவன் தனது நினைப்புக்களைச் சிற்றின்ப இச்சைகளில் அமிழ்த்தாமல் உயர்த்தல் வேண்டும். அவன் காரியசித்தி பெறுதற்குத் தனது சிற்றின்ப இச்சைகளையும் சுயநபத்தையும் பூரணமாக ஒழித்துவிடுதல் வேண்டா: அதில் ஒரு கூறாயினும் ஒழித்தல் வேண்டும். சிற்றின்ப இச்சையே முதன்மையான நினைப்பாகக் கொண்டுள்ளவன் தெளிவாக நினைப்பதும் ஒழுங்காகக் காரியங்களை வரையறுப்பதும் முடியா; அவன், தன்னுள் மறைந்துகிடக்கும் சக்தியைக் கண்டறிந்து அதை விர்த்திசெய்ய முடியாமல், தான் எடுத்த எந்த வேலையிலும் தவறுவான். தனது நினைப்புக்களை ஆண்மையுடன் அடக்கியாள ஆரம்பிக்காததால், அவன் தனது காரியாதிகளை அடிப்படுத்தி நிர்வகிக்கத்தக்க நிலைமையில் இல்லை. அவன் சுயாதீனமாக ஒன்று செய்யவும் சார்பில்லாமல் நிற்கவும் தகுதியில்லாதவன். அவன் கொள்கிற நினைப்புக்களே அவனுடைய சக்திக் குறைவிற்குக் காரணம்.

# மனம் போல வாழ்வு.

அபிவிர்த்தியாவது காரியசித்தியாவது கஷ்டப் பட்டாலன்றி உண்டாகாது. ஒருவன் தனது குழப்ப மான சிற்றின்ப நினைப்புக்களை ஒழித்துத் தனது ஆலோசனையை வளர்ப்பதிலும் தனது தீர்மானத்தை யும் சுயநம்பிக்கையையும் பலப்படுத்துவதிலும் எவ் வளவுக்குத் தன் மனத்தைச் செலுத்துகிறானோ, அவ் வளவுக்கு லௌகிகத்தில் காரியசித்தி உண்டாகும். அவன் தனது நினைப்புக்களை எவ்வளவு அதிகமாக மேம்படுத்துகிறானோ, அவ்வளவு அதிகமாக ஆண் மையும் யதார்த்தமும் ஒழுக்கமும்உள்ளவனாகி அவன் மேம்படுகிறதும் தவிர, அவனது காரியசித்திகளும் அதிகமாகின்றன. அவன் செய்துமுடித்த காரியங் களும் அதிக இன்பம் தருவனவாய் நீடித்திருப்பன வாகும்.

பிரபஞ்சம், பேராசைக்காரனுக்கும் அயோக்கி யனுக்கும் தீயவனுக்கும் அநுகூலம் செய்வதுபோல வெளிப்பார்வைக்குத் தோன்றினும், உண்மையில் அநு கூலம் செய்வதில்லை; அது யோக்கியனுக்கும் பெருந் தகையனுக்கும் நல்லவனுக்கும் உதவிசெய்கிறது. முற்காலத்துப் பெரிய ஆசிரியர் எல்லோரும் இவ்விஷ யத்தை வெவ்வேறு விதமாக வெளியிட்டிருக்கின்ற னர். இதனை அறிந்துகொள்ளவும் மற்றவர்களுக் குத் திருட்டாந்தப்படுத்திக் காட்டவும் வேண்டினால், ஒருவன் நாளுக்குநாள் தனது நினைப்புக்களை மேம்

படுத்தித் தன் சதாசாரத்தை மேன்மேலும் விர்த்தி செய்ய இடைவிடாது முயலவேண்டும்.

ஞானத்தை அடைவதற்கென்றே அல்லது பிரகிருதியிலும் வாழ்க்கையிலு முள்ள ரசங்களையும் உண்மைகளையும் கண்டறிவதற்கென்றே ஒப்புக் கொடுக்கப்பட்ட நினைப்பின் பலனாக விவேகசித்திகள் உண்டாகின்றன. அத்தகைய சித்திகள் சிலசமயங்களில் வீண்பெருமையோடும் பேராசையோடும் சம்பந்தப்பட்டிருக்கலாம்; ஆனால், அவை அக்குணங்களிலிருந்து உண்டானவையல்ல; அவை சுயநயமற்ற பரிசுத்த நினைப்புக்களினின்றும் நீடித்த அரிய முயற்சிகளினின்றும் இயல்பா யுண்டானவை.

ஆன்மசித்திகள் பரிசுத்தமான நாட்டங்களின் பூரண பலன்கள். எவன் இடைவிடாமல் மேன்மையுள்ள நினைப்புக்களையும் சிறந்த நினைப்புக்களையும் நன்கு கொண்டு வாழ்கிறானோ, எவன் பரநயமும் பரிசுத்தமு முள்ள பலவற்றிலும் நினைப்பைச் செலுத்துகிறானோ, அவன், சூரியன் உச்சமடைவதும் சந்திரன் பூரண வடிவை அடைவதும் எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாக, ஞானத்தையும் ஒழுக்கமேம்பாட்டையும் அடைவான்; அன்றியும் அவன் செல்வாக்கும் இன்பமு முள்ள ஸ்தானத்திற்கு உயர்வான்.

எவ்வகையான காரிய சித்தியும் முயற்சியின் முடியும் நினைப்பின் மகுடமு மாகும். தன்னடக்கம், நியமம், ஆன்மசுத்தி, நீதி, நிறை என்பவற்றின் உதவியால்

மனிதன் உயர்கிறான்; சிற்றின்பஇச்சை, சோம்பல், மனத்தீமை, அசுசி, மனக்குழப்பம் என்பவற்றால் மனிதன் தாழ்கிறான்.

ஒருவன் இவ்வுலகத்தில் மிகவுயர்ந்த ஸ்தானத்திற்கும் ஆன்ம உலகத்தில் மிகவுயர்ந்த பதவிகளுக்கும் உயரலாம். பின்னர் கர்வமும் சுயநயமும் அயோக்கியதையும் பொருந்திய நினைப்புக்களுக்கு இடம் கொடுத்துப் பலஹீனமும் துன்பமும் நிறைந்த நிலைகளுக்குத் தாழலாம்.

நியாயமான நினைப்பால் பெறப்பட்ட வெற்றிகளை எச்சரிக்கையோடு போற்றிக் காக்கவேண்டும். வெற்றி பெறுகிற சமயத்தில் அங்ஙனம் செய்யாமல் அநேகர் திரும்பவும் தோல்வி அடைகின்றனர்.

தொழிலுலகம் புத்தியுலகம் ஆன்மவுலகம் இவற்றில் எதிலாயினும் பெறுகின்ற சித்திகள் குறித்த வழிகளில் சரியாகச் செலுத்தப்பட்ட நினைப்பின் பயனாகக் கிடைக்கின்றன: அவை யெல்லாம் ஒரே நியதியால் ஆளப்படுகின்றன: அவையெல்லாம் ஒரே தன்மையனவா யிருக்கின்றன; வித்தியாசமெல்லாம் பெற்ற பொருளில் உள்ள வித்தியாசமே. சிறிய சித்தி பெற விரும்புகிறவன் சிறிது கஷ்டப்படல்வேண்டும்; பெரிய சித்தி பெற விரும்புகிறவன் பெரிது கஷ்டப்படல் வேண்டும்; அதி உன்னதமான நிலையை அடைய விரும்புகிறவன் அதிகமாகக் கஷ்டப்படல் வேண்டும்.

## மனக்காட்சிகளும் இலக்ஷியங்களும்.

மனக்காட்சியாளர் உலகத்தின் இரக்ஷகர் ஆவார். மனக்காட்சியாவது விழித்துக்கொண்டு பல நல்ல காரியங்களை நினைத்துக் கண்டுகொண்டிருத்தல். ஸ்தூல உலகம் சூக்ஷ்ம உலகத்தை ஆதாரமாகக் கொண்டிருத்தல் போன்று, மனிதர் பாவங்களையும் இழிவான செயல்களையும் செய்யும்போதும், கஷ்டங்களை அநுபவிக்கும்போதும், தம்மைச் சேர்ந்த மனக்காட்சியாளருடைய அழகிய மனக்காட்சிகளால் போஷிக்கப்படுகின்றனர். மனித சமூகம் தனது மனக்காட்சியாளரை மறத்தல் முடியாது; அஃது அவருடைய மனோலக்ஷியங்கள் மங்கிப்போகவும் அழிந்துபோகவும் விடுதல் முடியாது; அஃது அம்மனோலக்ஷியங்களில் வாழ்கின்றது; அவை ஒருகாலத்தில் பிரத்தியக்ஷத்தில் காணவும் அறியவும் தக்க உண்மைகள் என்று அஃது அறியும்.

இசைவாணரும், சித்திரவோடாவிகளும், ஓவியரும், கவிவாணரும், சமயாசாரியர்களும், சாதுக்களுமே மறு உலகத்தைக் கட்டுகிறவர்கள், மோக்ஷஉலகை நிருமிப்பவர்கள். அவர்கள் வாழ்ந்திருந்ததனாலேயே இவ்வுலகம் செவ்விபெற்றிருக்கின்றது. அவர்கள் இல்லாத பக்ஷத்தில் உழைத்துவருந்தும் மனிதசமூகம் அழிந்து போயிருக்கும்.

எவன் தன் ஹிருதயத்தில் ஓர் உயர்ந்த லக்ஷியமாகிய காட்சியைப் பேணிவருகின்றானோ, அவன் அதனை

ஒருகாலத்தில் பிரத்தியக்ஷத்தில் காண்பான். கோலம்பஸ் என்பவர் வேறோர் உலகக்காட்சியைத் தம் மனத்தில் பேணிவந்தார்; அவர் அதனைக் கண்டுபிடித்தார்; கோப்பர்நிக்கஸ் என்பவர் பல உலகங்களுடைய காட்சியையும் ஒரு பெரிய பிரபஞ்சத்தினுடைய காட்சியையும் தம்மனத்தில் ஓம்பிவந்தார்; அவர் அவற்றைக் கண்டார்: புத்தர் மாசற்ற அழகும் மனரம்மியமுமுள்ள ஒரு மோக்ஷ உலகத்தின் காட்சியைத் தமது மனத்தில் பார்த்துவந்தார்; அவர் அதனுள் பிரவேசித்தார்.

உங்கள் மனக்காட்சிகளைப் பேணுங்கள்; உங்கள் மனோலக்ஷியங்களை ஓம்புங்கள்; உங்கள் ஹிருதயத்தில் உற்சாகத்தைக் கிளப்பும் கீதத்தையும், உங்கள் மனத்தில் உண்டாகின்ற ரமிப்பையும், உங்கள் தூய நினைப்புக்களை அலங்கரிக்கும் அன்பையும் பரிபாலியுங்கள்; ஏனெனில், எல்லா இன்பநிலைமைகளும், எல்லா மோக்ஷ சாதனங்களும் அவற்றினின்று வெளிப்பட்டு வளராநிற்கும்; நீங்கள் அவற்றை உண்மையாகப் போற்றிவருவீர்களாயின், முடிவில் உங்கள் உலகத்தை அவற்றாலே நிருமித்துக்கொள்ளலாம்.

அவாவுதலே அடைதலாம்; நாடுதலே நிறைவேற்றுதலாம். மனிதனது மிக இழிந்த அவாக்கள் முற்றும் நிறைவேறுதலாயிருக்க, அவனது மிக உயர்ந்த விருப்பங்கள் ஆதரணையில்லாமையால் பலன்களை அடையாமல் வீண்போதலுண்டா? தெய்வ நியதி அத்தகைய

நிகழ்ச்சிக்கு இடங்கொடாது. அத்தகைய நிலைமை ஒருபொழுதும் நேராது; "அழுத பிள்ளை பால்குடிக்கும்."

உங்கள் மனத்தில் உயர்ந்த காட்சிகளைக் காணுங்கள்; நீங்கள் கண்டதே காட்சி, பெற்றதே பேறு. இப்போது நீங்கள் காணும் காட்சியே இனி நீங்கள் பெறும் பேற்றுக்கு உறுதி; நீங்கள் கொண்டிருக்கும் மனோலக்ஷியமே முடிவில் கைவல்லியமாகும்.

எப்படிப்பட்ட மகாசித்தியும் முதலில் சில காலம் ஒரு மனக்காட்சியாகத்தான் இருந்தது. பெரிய ஆலமரம் சிறியவித்தில் உறங்கியிருக்கின்றது; பறவை தனது முட்டைக்குள் காத்திருக்கின்றது; ஆன்மாவின் மிக மேலான மனக்காட்சியில் விழிப்புண்டாக்கும் ஓர் தேவதூதன் நடமாடுகிறான். அப்பிரத்யக்ஷமான மனக்காட்சிகள் பிரத்யக்ஷ சித்திகளின் வித்துக்கள்.

உங்கள் நிலைமைகள் பொருத்தமில்லாதனவாய் இருக்கலாம்; ஆனால், நீங்கள் ஒரு மனோலக்ஷியத்தை வைத்துக்கொண்டு அதனை அடைதற்கு முயன்றால் அந்நிலைமைகள் அங்ஙனமே நீடித்திரா. அகத்தில் இயக்கம் உண்டாயிருக்கப் புறத்தில் நிலைபெறு உண்டோ? அசௌக்கியமுள்ள ஒரு தொழிற்சாலையில் நீடித்த நேரம் வேலை செய்து, வித்தியாப்பியாசமில்லாமல், ஆசார உபசாரங்கள் அறியாமல், வறுமையாலும் உழைப்பாலும் மிகவருந்தும் பாலியன் ஒருவன் இதோ இருக்கிறான். அவன் தனது நிலைமையைப்பார்க்கிலும்

மேலான நிலைமையைத் தனது மனத்தில் கண்டுவருகிறான்; அவன் அறிவு, நாகரீகம், அருள், அழகு முதலியவற்றைப் பற்றி நினைக்கிறான். மனத்தில் ஒருவித வாழ்க்கையை லக்ஷியமாகக்கொண்டு மனோரதம் செய்துவருகிறான்; அதிகப்படி சுதந்தரமும் மேலான நோக்கமும் பொருந்திய காட்சி அவனைப் பற்றிக்கொண்டிருக்கிறது; அவன் ஆத்திரம் அவனைச் செயலின் கண் தூண்டுகிறது; அவனுக்கு ஒழிவான சுவல்ப காலத்தையும் மீதியான கொஞ்சம் பொருளையும் கொண்டு, வெளிப்படாமல் மறைந்திருந்து தன் சக்திகளை விர்த்தி செய்து வருகிறான். அத்தொழிற்சாலை அவனுக்குப் போதாத விதத்தில் அவன் மனம் வெகு விரைவில் மாறிவருகின்றது. அவ்விடம் அவன் மனநிலைக்கு மாறாகிவிட்டமையால், அவன் மனநிலைக்கேற்ற சந்தர்ப்பங்கள் வாய்க்குமளவில் அவன் அச்சாலையை உதறிக்கொண்டு வந்துவிடுகிறான். இந்தப் பாலியன் சிலவருஷங்களுக்குப்பின் நல்ல காத்ரபுருஷனா யிருப்பதைக் காண்கிறோம். அவன் மனத்தின் சில சக்திகளைத் தன்வசப்படுத்தி அவற்றை நிகரற்ற வல்லமையுடன் கையாள்வதால், அவனுக்கு உலகமுழுவதும் செல்வாக்கு உண்டாயிருப்பதை நாம் பார்க்கிறோம். இப்பொழுது பாரதூரமான காரியங்களுக்கு அவன் சூத்திரதாரியா யிருக்கிறான். இதோ பாருங்கள்! அவன் நாவசைந்தால் நாடசைகின்றது. அவன் ஏதோ சொல்லுகிறான். அவ்வளவிலே எத்தனையோ பேருடைய

வாழ்க்கைகள் மாறுதலடைகின்றன. அவன் என்ன சொல்லுகிறனென்று ஆண்களும் பெண்களும் அவா வோடு கேட்கிறார்கள். கேட்டுத் தங்கள் ஒழுக்கங் களைச் சீர்திருத்துகிறார்கள்; மத்தியமாயுள்ள சூரியன் ஆதாரமாகப் பல கோளங்கள் சூழ்ந்துவருவதுபோல, அவன் ஆதாரமாக எண்ணில்லாத காரியகர்த்தர்கள் அவனைச் சூழ்ந்து வருகின்றார்கள். அவனுக்குப் பாலி யத்தில்தோன்றிய மனக்காட்சி இப்பொழுது பிரத்தி யக்ஷ அநுபவமாக இருக்கிறது. அவன் தனது மனோ லக்ஷியத்தோடு ஐக்கியமாகியிருக்கிறான்.

இதனை வாசிக்கிற பாலியர்களே! நீங்களும் உங் கள் ஹிருதயத்தில் காணும் காட்சி (வீண் விருப்பம் அன்று) உயர்ந்ததாயிருப்பினும், தாழ்ந்ததாயிருப்பி னும், அல்லது அவ்விரண்டின் கலப்பாயிருப்பினும், அதனைப் பிரத்தியக்ஷத்தில் அநுபவிப்பீர்கள்; ஏனெனில், நீங்கள் எதனை அந்தரங்கத்தில் அதிகமாக நேசிக்கிறீர்களோ, அஃது உங்களைத் தன்னிடமாக இழுக்கின்றது. உங்கள் சொந்த நினைப்புக்களின் சரியான பலன்களே நீங்கள் கைகாணும் பலன்கள். நீங் கள் எதனைத் தேடுகிறீர்களோ அதனைப் பெறுவீர்கள். அதற்கு அதிகமாகவுங் கிடைக்காது, குறைவாகவுங் கிடைக்காது. உங்கள் தற்கால நிலைமை எஃதாயினுஞ் சரி, உங்கள் நினைப்புக்களும் உங்கள் மனக்காட்சி யும், உங்கள் மனோலக்ஷியமும் உயர்ந்தால் நீங்களும் உயர்வீர்கள்; அவை தாழ்ந்தால் தாழ்வீர்கள்; அவை

எவ்விதம் உள்ளனவோ அவ்விதமே இருப்பீர்கள். உங்களை ஆளும் அவா சிறியதாயின், நீங்களும் அதற்கேற்றபடி சிறியரே ஆவீர்கள்; உங்களை ஆளும் கோரிக்கை பெரியதாயின், நீங்களும் அதற்கேற்றபடி பெரியர் ஆவீர்கள். ஸ்டாண்டன் கிரச்காம்டேவிஸ் என்பவர் அலங்கரித்துச் சொல்லியபடி "நீங்கள் லேககராய்க் கணக்குகள் எழுதிக்கொண்டிருக்கலாம்; திடீரென ஒருநாள் எழுந்து, உங்கள் மனோலக்ஷியங்களுக்குத் தடையாக நீடித்த காலம் தோன்றிக்கொண்டிருந்த உங்கள் அறையை விட்டு வெளியே செல்வீர்கள்; அவ்விடத்தில் உங்கள் பிரசங்கத்தைக் கேட்பதற்குச் சித்தமாயிருக்கும் அநேகரைக் காண்பீர்கள்—இன்னமும் உங்கள் காதில் எழுதுகோலும், உங்கள் விரல்களில் மைக்கறையும் இருக்கலாம்—உங்கள் மனத்தின் ஆவேசமான ஞானத்தைத் தாரைதாரையாகப் பொழிவீர்கள். நீங்கள் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கலாம்; நீங்கள் ஆடுமேய்க்கும் சத்தத்தோடும் திறந்தவாயோடும் நகரத்துக்குச் செல்ல, உங்கள் ஆவேசம் உங்களை ஒரு சித்திர ஓடாவியிடம் தள்ளிக்கொண்டு போகலாம். சிலநாளானபின் சித்திரவோடாவி உங்களைப் பார்த்து 'நான் இனிமேல் உங்களுக்குக் கற்பிக்கவேண்டுவது ஒன்றுமில்லை.' என்று கூறலாம். சமீபகாலத்தில் ஆடுகளை ஓட்டிக்கொண்டிருந்தபொழுது பெருங் காரியங்களை மனோரதித்திருந்த நீங்கள் இப்பொழுது சித்திரஓடாவி யாகிவிட்டீர்

கள். கம்மியத்தொழில் செய்திருந்த நீங்கள் இவ்வுல கத்தைச் சீர்திருத்துமாறு உங்கள் வாளையும் இழைப் புளியையும் ஒழித்துவிடுவீர்கள்."

ஆலோசனையில்லாதவர்களும் பாமரர்களும் சோம் பர்களும் சங்கதிகளைக் கவனிக்காமல் அவைகளின் வெளிப்படையான காரியங்களை மாத்திரம் பார்த்து யோகமென்றும், அதிர்ஷ்டமென்றும், தற்செயலென் றும் பேசிக்கொள்வதுண்டு. ஒருவன் பணக்காரனாகிற தைப் பார்த்து, "இவன் எவ்வளவு அதிர்ஷ்டசாலி!" என்கின்றனர். மற்றொருவன் புத்திசாலியாயிருக்கிற தைப் பார்த்து, "இவனுக்கு எவ்வளவு நல்ல பாக்கியம் கிடைத்திருக்கிறது!" என்று வியந்துரைக்கின்றனர். வேறொருவனது மஹனீய குணத்தையும் விரிந்த செல்வாக்கையும் பார்த்து. "இவனுக்கு ஒவ்வொரு வழியிலும் எப்படித் தற்செயலாக உதவிகள் நேரிடுகின் றன!" என்கின்றனர். இவர் தமது அநுபவங்களைப் பெறுதற்கு விருப்பத்தோடு பட்டிருக்கிற கஷ்டங்களை யும், அடைந்திருக்கிற தவறுதல்களையும், செய்திருக் கிற போராட்டங்களையும் அவர் பார்க்கின்றிலர்; இவர் ஹிருதயத்தின் காட்சியைப் பிரத்தியக்ஷத்தில் கொண்டுவருதற்கும், இவருடைய மார்க்கங்களில் கடக்கமுடியாதனவாகத் தோன்றிய இடையூறுகளை நீக்குதற்கும் இவர் செய்திருக்கிற பரித்தியாகங்களை யும், துணிகரமான முயற்சிகளையும், இவர் கொண்டி ருந்த கொள்கைகளையும்பற்றி அவர்கள் ஒன்றும் அறி

யார்கள். இவரது கஷ்டங்களையும் கவலைகளையும் அறியாது, இவரது சுகத்தையும் சாந்தியையும் மாத்திரம் பார்த்து, அதற்குக் காரணம் "அதிர்ஷ்டம்" என்று கூறுகின்றார்கள்; இவரது நீண்ட பிரயாசையான யாத்திரையைப் பாராது, இவர் சேர்ந்திருக்கும் இடத்தைமாத்திரம் பார்த்து, அதனை "நல்ல யோகம்" என்று சொல்கின்றார்கள்; இவர் செய்த முயற்சிகளைக் கவனியாது, இவர் பெற்றுள்ள பலனைமாத்திரம் பார்த்து, அதனைத் "தற்செயல்" என்கின்றார்கள்.

மனிதரது சகல காரியங்களிலும் முயற்சிகளும் உண்டு; பலன்களும் உண்டு. முயற்சி எவ்வளவோ பலனும் அவ்வளவே. காலமென்றுவது, அதிர்ஷ்டமென்றுவது, ஒன்றில்லை. பேறுகளும், சக்திகளும், உலகவுடைமைகளும், அறிவுடைமைகளும், மோக்ஷவுடைமைகளும் முயற்சியின் பலன்கள்; அவை முற்றுப்பெற்ற நினைப்புக்கள்; செய்துமுடித்த காரியங்கள்; அநுபவித்த மனக்காட்சிகள்.

உங்கள் மனத்தில் நீங்கள் போற்றிவரும் காட்சியோ உங்கள் ஹிருதயத்தில் உன்னதமாயிருக்கும் லக்ஷியமோ உங்கள் வாழ்க்கையை ஆக்கிக்கொள்ள முதற்கருவியாகும்; இதுவே உங்களுக்கு அநுபவசித்தியாகும்.

## சாந்தி.

மனோசாந்தி ஞானத்தின் அழகிய ஆபரணங்களில் ஒன்று. அது தன்னை (உடம்பையும் நினைப்பையும்) அடக்கி யாள்வதற்காகப் பொறுமையோடு நீண்ட காலம் செய்த முயற்சியின் பலன். அதன் உடைமை முதிர்ந்த அநுபவமும், நினைப்பின் செயல்களையும் நியதிகளையும் நன்குணர்ந்த அறிவும் உண்டாயிருப்பதைக் காட்டும் ஓர் குறி.

மனிதன் தன்னை நினைப்பிலிருந்து பரிணமித்த ஒரு பிராணியென்று எவ்வளவாக அறிகிறானோ அவ்வளவாக அமைதியை அடைகிறான்; ஏனெனில், அவ்வறிவு நினைப்பின் காரியமாகவே பிறரும் உண்டாயிருக்கின்றனரென்று அறிவதற்கு ஏதுவாகின்றது. சரியாக அறியப் பழகிக் காரணகாரிய நியதியைக் கவனித்துக் காரியாகாரியங்களின் உள்சம்பந்தங்களை மேலும் மேலும் தெளிவாகப் பார்ப்பதனால், அவன் வீணில் அலப்புவதும் கோபிப்பதும் கவலைப்படுவதும் துக்கிப்பதும் இல்லாமல் நிலையாய் நிதானமாய்ச் சாந்தமாயிருக்கிறான்.

அமைதியுள்ள மனிதன், தன்னை அடக்கியாளக் கற்றுக்கொண்டபடியால், மற்றவர்களோடு இணங்கி நடக்கும் விதத்தை அறிகிறான்; அவர்களும், தங்கள் மட்டில் அவனது ஞானாதிக்கத்தை மதித்து, அவனிடமிருந்து சில கற்கலாமென்றும், அவன்மீது நம்பிக்கை

வைக்கலா மென்றும் உணர்கிறுர்கள். ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக அமைதியுள்ளவனுகிருனே, அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய காரியசித்தியும் செல்வாக்கும் நன்மைசெய்யும் சக்தியும் அதிகரிக்கின்றன. ஒரு சாதாரண வியாபாரியும், தன்னடக்கத்தையும் சாந்தத்தையும் விர்த்திசெய்து வந்தால், அவனுடைய வியாபாரம் விர்த்தியாவதைக் காண்பான்; ஏனெனில், மிகவும் சாந்தமான ஒழுக்கமுள்ளவனிடத்தில் கொடுக்கல்வாங்கல் செய்யவே ஜனங்கள் பிரியப்படுவது சகஜம்.

திடமும் அமைதியு முள்ளவனிடத்தில் எல்லோரும் எப்பொழுதும் நேசமும் மதிப்பும் பாராட்டுவார்கள். அவன் பாலைவனத்தில் நிழல்தரும் மரத்தை ஒத்தவன். அமைதியான மனத்தையும் இனிமையான வாக்கையும் நிதானமான வாழ்க்கையையும் விரும்பாதவர் எவர்? இந்நற்குணங்கள் வாய்ந்தவர்களுக்கு மழை பெய்தாலும், வெய்யில் காய்ந்தாலும், வேறு எவ்வித மாறுதல்கள் உண்டானுலும் ஒன்றுமில்லை; ஏனெனில், அவர்களிடத்தில் இனிமையும் நிதானமும் சாந்தியும் எக்காலத்தும் உண்டு. நாம் நிதான மென்று சொல்லும் ஒழுக்கமானது மனோவிர்த்தியின் முடிவான பாடமாகும். வாழ்க்கையின் மலரும், ஆன்மாவின் கனியும் அதுவே. அது ஞானத்தைப் போல அரியது; தங்கத்தினும் — ஆம், பத்தரைமாற்றுத் தங்கத்தினும் — அதிகமாக விரும்பத்தக்கது. உண்மைக் கடலில் எதற்

கும் சலிக்காமல் வாழும் நிதான வாழ்க்கையோடு வெறும் தனுர்ச்சிதத்தை ஒப்பிட்டுப்பார்த்தால், தனுர்ச்சிதம் எவ்வளவு அற்பமாய்த் தோற்றுகின்றது ?

" நாம் தினந்தோறும் காண்கின்ற மனிதரில் எத்தனை பேர் தமது அருமையான உயிர்களை வருத்துகின்றனர்? கடுகடுத்த முகமும் வெடுவெடுத்த பேச்சும் கொண்டிருக்கின்றனர்? நட்பை விடுத்துப் பகையை ஆக்குகின்றனர்? நிதானமான ஒழுக்கத்தை விடுத்து நீங்காத துன்பத்தை அடைகின்றனர்? தம்மை அடக்கும் சக்தி இல்லாமல் தமது வாழ்நாள்களை நாசமாக்கித் தமது இன்பங்களைக் கெடுத்துக்கொள்வோர் உலகில் பெரும்பால ரல்லரோ? சான்றாண்மைக்குரிய சிறப்பியல்பான நிதானத்தோடு வாழ்பவர் மிகச் சில ரல்லரோ?"

ஆம்! மனிதசமூகம் அடக்கியாளாத காமக்குரோதங்களால் அலைப்புண்கின்றது; அடக்காத துக்கத்தால் குழம்புகின்றது; விடாத கவலையாலும் ஐயத்தாலும் சிதறுகின்றது. தனது நினைப்புக்களை அடக்கிப் பரிசுத்தப்படுத்திய அறிவாளனே ஆன்மாவை அலைக்கழிக்கும் புயல்களை அடிப்படுத்துகிறான்.

புயல்காற்றில் அடிபட்டலையாநின்ற ஆன்மாக்களே! நீங்கள் எவ்விடத்தில் இருப்பினும், நீங்கள் எத்தகைய நிலைமைகளில் வாழினும், இதனைத் தெரிந்து கொள்ளுங்கள்.—வாழ்க்கையாகிய சமுத்திரத்தில் பாக்

கியமாகிய தீவுகள் ரமணீயமாக விளங்குகின்றன. உங்கள் மனோலக்ஷியமான அழகிய கரைகள் உங்கள் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றன. நினைப்பாகிய சுக்கானை உங்கள் அறிவாகிய கைகளால் தளராமல் பிடித்திருங்கள். உங்கள் ஜீவனாகிய ஓடத்தில் அதனை நடத்தும் ஆன்மாவாகிய மாலுமி சயனித்திருக்கிறான்; அறிதுயிலாக அமர்ந்திருக்கின்ற அவனை எழுப்புங்கள். தன்னடக்கமே வல்லமை; சரியான நினைப்பே ஆண்மை; அமைதியே ஆற்றல். உங்கள் ஹிருதயத்தைப் பார்த்து, "கவலை கொள்ளாதே, சாந்தியாயிரு." என்று சொல்லுங்கள்.

முற்றிற்று.